விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 03 வியாழக்கிழமை (19.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சிங்களக் காடையர்களின் தாக்குதல்களே பிரபாகரன் ஆயுதம் ஏந்தக் காரணமானது

### முன்னாள் தூதுவர் சரத் முனசிங்க சாட்சியம்

(கொழும்பு)

அமைதியான வழியில் போராடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிங்கள இனத்தை சேர்ந்த காடையர்களும் புத்த பிக்குகளும் சேர்ந்து கடுமையாகத் தாக்கினர்.

இவை போன்ற நிகழ்வுகளே வே.பிரபாகரனும் தமிழ் இளைஞர்களும் கைகளில் ஆயுதம் ஏந்தக் காரணம் ஆகிவிட்டன. இப்படி தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன்சாட்சியம் வழங்கினார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தியா, பிரித்தானியா போன்ற நாடுகளில் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றியவருமான மங்கள முனசிங்க.

அவர் அங்கு முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு,

தேச நலன் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அரசியல்வாதிகள் ஒருவரோடு ஒருவர் (20ஆம் பக்கம் பார்க்க)

## 200 இலிருந்து 500 ஆன உயர்பாதுகாப்பு வலயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் விஸ்தீரணத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் 200 ஏக்கர் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் அது 500 ஏக்கர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் படையினரை கிளிநொச்சியில் (20ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசின் சிறப்புப் பிரதிநிதி அடுத்தமாதம் இலங்கைக்கு வருகை

### முதல்வரை சந்தித்தபின் நிருபமா தகவல்



(சென்னை)

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் மற்றும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்வதற்காக இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதி அடுத்த மாதத் தொடக்கத்தில் இலங்கை வரவிருப்பதாக இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். நேற்று மாலை சென்னையில் தமிழக முதல்வர் கருணாநிதியை சந்தித்து ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்திய அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இந்தத் தகவலைத் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலி சந்தேக நபர்கள் 7 பேரை நீதிமன்றம் விடுவித்தது

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு கொழும்பின் புறநகரில் மீட்கப்பட்ட கிளைமோர் குண்டு தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 7 பேரை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றபோது இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் மன்றில் தெரிவித்தமையை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

போர் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கையில் சுமார் 10 ஆயிரம் பேர் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளுக்கு கனடா எச்சரிக்கை

(ரொரன்டோ)

சட்டவிரோத அகதிகளுக்கான பிரவேச முறையை கடுமையாக்கப் பின் நிற்கப்போவதில்லை எனக் கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் அறிவித்துள்ளார்.

கனேடிய ஊடகம் ஒன்றுக்கு தகவல் தெரிவிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனடா தற்போது அகதிகளுக்கான இடமாக மாறியுள்ளது. வருடாந்தம் கனடா ஆயிரக்கணக்கானோருக்கு குடியுரிமைகளை வழங்கி வருகிறது.

எனினும் அதனைப் (20ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த உடன்படிக்கையின் தோல்விக்கு சந்தேகமே காரணம்



### அரசு-புலிகள் மீது ஒஸ்ரின் குற்றச்சாட்டு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைந்தமைக்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. படைத்தரப்பிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்தேகம் இருந் தமையே இதற்குக் காரணம் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று இடம்பெற்ற போது சாட்சியம் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

படைத்தரப்பு, விடுதலைப் புலிகளைச் சந்தேகமாகப் பார்த்த அதே நேரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் புலி உறுப்பினர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயிற்சி பெற்றுள்ளதாக பாதுகாப்புச செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் சாட்சியமளித் தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தில் காயமடையும் புலி உறுப்பினர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நோக்கில் இவ்வாறு பயிற்சிகளைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## சகல கட்சிகளினதும் இணக்கத்துடன் அரசியலமைப்பை திருத்தம்செய்ய முயற்சி

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புத் திருத்தங்கள் தற்போதுள்ள அரசியலமைப்பில் காணப்படும் நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு ஜனநாயக வரையறைக்குள் புதிய திருத்தங்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் சகல கட்சிகளின் இணக்கத்துடன் மேற்கொள்ள முயற்சிக்கப்படுவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

JFHL

## சுகவாழ்வுக்கான பயணம்
## JOURNEY FOR HEALTHY LIFE

### அடிப்படை சுகாதார மருத்துவ கற்கை நெறி

**நோக்கம் :-** அடிப்படை சுகாதார மருத்துவ அறிவையும் செயற்றிறன்களையும் பெற்றிருத்தல்.

**அடிப்படை தகைமை:-** G.C.E. O/L சித்தியடைந்திருத்தல்.

**பயிற்சிக் காலம்:-** 6 மாதம் (வார/ வார இறுதி நாட்கள்)

**பயிற்சிக் கட்டணம்:-** ரூபாய் 5000.00

**விண்ண முடிவுத் திகதி:-** 27.08.2010

**அனுப்ப வேண்டிய முகவரி:-** இணைப்பாளர்,
3 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குறிப்பிட்ட தனியார் வைத்தியசாலைகளின் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும். இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சுகாதாரத்துறையில் தொழில் வாய்ப்புள்ளது.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மருத்துவ அறிவையும் திறன்களையும் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நிர்வாக உத்தியோகத்தர்
சுகவாழ்வுக்கான பயணம்

தொலைபேசி இல. : 021 321 6436 (2197)


# கொக்குவில் வாள் வெட்டுத் தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி மூன்று சிங்கள தளபாட வியாபாரிகள் வாள் வெட்டுக்கு உள்ளாகியமை தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிங்கள வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள வர்த்தகர் ஒருவரிடம் தளபாடங்களை மொத்தமாக விற்பனை செய்துள்ளனர்.

எனினும் இந்த வியாபாரிகள் தாம் மொத்தமாக விற்பனை செய்த வியாபாரிக்குத் தெரியாமல் பாவனையாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்ய முயன்றபோதே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்தே சிங்கள வர்த்தகர்கள் வாள் வெட்டுக்கு உள்ளாகியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த மூன்று இளைஞர்களும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-5)

# காவல்துறையைச் சேர்ந்த இருவர் புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றம்

முன்னாள் விடுதலைப்புலி இயக்க பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை வெலிகந்தப் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புமாறு கொழும்பு மேலதிக நீதவான் தம்மிக்கலங்காதிலக உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களான கந்தசாமி குணபாலன், மாரிமுத்து திருச்செல்வம் ஆகிய இருவரையும் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு உதவி பொலிஸ் பரிசோதகர் விஜயரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது செய்தனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட போது விடுதலைப் புலிகளின் பொலிஸ்பிரிவில் இணைவதற்கு முன் புலிகளின் செயற்பாடுகளில் பயிற்சி பெற்றிருந்தது தெரிய வந்தது.

இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இவர்களை விடுதலை செய்யும்படி அல்லது புனர்வாழ்வுக்காக அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து இவர்கள் இருவரையும் வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டார். (ச-5)


### வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடாத்தப்படும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் :- கொத்துத்துறை சவாரித்திடல்
காலம்:- 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பி.ப. 2 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை (C-893) - விவசாயிகள்


# உதைபந்தாட்ட லீக் போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டியில்,

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4.30 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளன.

இதன் அரையிறுதிப் போட்டிகள் மின்னொளியில் நடைபெறவுள்ளன. (ச-4,24)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்து, கரப்பந்து, வலைப்பந்து, சதுரங்கம் மற்றும் கிரிக்கெட் (மென்பந்து) போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை இல. 175, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள ரமணன் ஸ்போற்சில் பெற்றுக் கொள்ளலாம். (ச-3)




### மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

**கங்காதரன் சாஸ்திரி**
**077 0712537**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்**

121 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்) (2199)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களை அழைக்கின்றோம்

வெளிநாடுகளிலிருந்து வரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களைக் கல்லூரி அதிபர், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சந்தித்துக் கலந்துரையாட விரும்புகின்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அதிபர்,
பழைய மா.சங்க செயலாளர்,
பாடசாலை அ.சங்க செயலாளர்.

தொ.பே.இல.:- 021 2222431 (C-890)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் வர்த்தக அரங்கின் கதாநாயகனாகத் திகழ்ந்து நியாயம், நீதியுள்ள வணிக முயற்சியால் வளர்ந்து நாடறிந்த நற்பிரஜையாக வாழ்ந்து 16.08.2010 அன்று சிவபதமடைந்த

### திரு.ச.வி.முருகேசு

தொழில் அதிபர் அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
PAARATHY FOOD PRODUCT
பாரதி கைத்தொழில் நிறுவனம்
19, சம்பியன் லேன், கொக்குவில் (2194)



## மனோதத்துவ வைத்தியம்
*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

### மீண்டும் யாழில்

**20.08.2010 முதல் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.**
**பதிவுக் கட்டணம் ரூபா: 250/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஹூரிஸ் இன்
392, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (C-888)



### காணி வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திக்கு சமீபமாக (200 மீற்றர்) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
077 7043852 /
077 3313104 (2201)



13.08.2010 முதல்




செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# இன்று ஒரு தகவல்

## புரந்தரதாசர்

கன்னட.தேசத்தில் ஒரு இரத்தின வியாபாரி இருந்தார். அவருடைய பெயர் நவகோடி நாராயணன். வசதிக்குக் குறைவில்லை. பெரிய கோடீஸ்வரர். பணம் தான் அவரிடம் இருந்ததே தவிர தாராளமனம் இருக்கவில்லை.

யாராவது உதவியென்று வந்து நின்றால் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார். தானதருமம் எதுவும் செய்யமாட்டார்.

அவருடைய மனைவியின் பெயர் லக்ஷ்மி அம்மாள். அவருக்குத் தாராளமனம். யாராவது வந்து உதவி என்று கேட்டால் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பவர். இருந்தாலும் அவரையும் இவர் எதுவும் செய்ய விடுவதில்லை.

ஒருநாள் நவகோடி நாராயணன் தன்னுடைய கடையில் உட்கார்ந்து வியாபாரத்தை மும்முரமாக கவனித்துக் கொண்டிருந்தார். அந்தச்சமயத்தில் வயதான பெரியவர் ஒருத்தர் அவருக்கு முன்னால் வந்து நின்றார். "ஐயா, என் மகளுக்குக் கல்யாணம். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நீங்கள் ஏதாவது நிதி உதவி செய்தால் பரவாயில்லை"என்றார்.

இவர் எப்படிக் கொடுப்பார்?"அதெல்லாம் ஒன்றுமில்லை. போயிட்டு வா"என்று சொல்லிவிட்டார். அந்தப்பெரியவர் உடனே கடையை விட்டு புறப்பட்டார். நேராக நவகோடி நாராயணன் வீட்டுக்குப் போய் நின்றார்.

அங்கே அந்த அம்மா அப்பொழுதுதான் துளசி பூஜை செய்து கொண்டிருந்தார். இந்தப் பெரியவர் தன்னுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி என்று கேட்டார். அந்த அம்மா உடனே தன்னுடைய வைர மூக்குத்தியை கழற்றிக் கொடுத்து விட்டார்.

அதை வாங்கிக் கொண்டு அந்தப் பெரியவர் நேராக எங்கே போனார் தெரியுமா?

நவகோடி நாராயணனின் கடைக்கு வந்தார்.இந்த மூக்குத்தியை வைத்துக் கொண்டு பணம் கொடுங்கள் என்று கேட்டார். அவர் மூக்குத்தியை வேண்டிப் பார்த்தார்.

"என்ன இது? இது நம்ம வீட்டு மூக்குத்தி மாதிரி தெரியுது?"என்று சந்தேகப்பட்டார்.

"என்ன செய்யலாம்?"என்று யோசித்தார்.

அந்த மூக்குத்தியை அங்கிருந்த ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

"ஐயா, பெரியவரே கொஞ்ச நேரம் இப்படி உட்காருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து வீட்டுக்குப் போனார்.

"லக்ஷ்மி இங்கே வா"என்றார்.

"எங்கே உன் மூக்குத்தி?"என்று கேட்டார்.

"இன்றைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்தேன். அது தான் கழற்றி வைத்திருக்கிறேன்"என்றார் அந்த அம்மா.

"எங்கே வைத்திருக்கிறாய்? எடுத்துக் கொண்டு வா"என்றார். அந்த அம்மாவுக்கு பயமாகிவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"துளசி அம்மனே! நீதான் துணை!" என்று வேண்டிக் கொண்டு போய்ப் பெட்டியைத் திறந்தார்.

அங்கே பார்த்தால்...மூக்குத்தி இருந்தது. உடனே அதை எடுத்துக்கொண்டு வந்து கணவனிடம் கொடுத்தார்.

நவகோடி நாராயணன் பார்த்தார். உடனே திரும்பி வந்து கடையில் பார்த்தார்.அங்கே அந்தப் பெரியவரையும் காணவில்லை . மூக்குத்தியையும் காணவில்லை.அவருக்கு ஒரே ஆச்சரியம்.

மனைவி கொடுத்த மூக்குத்தியை மறுபடியும் எடுத்துப் பார்த்தார். அப்போது அதில் ஒரு காட்சி தெரிந்தது. பாற்கடலில் நாராயணன் ,ஆதிசேஷன் மீது படுத்திருக்கிறார். எதிரில் நாரதர் நிற்கிறார்.அந்த நாரதர் தான் தானென்ற உணர்வு நவக்கோடி நாராயணனுக்கு ஏற்பட்டது. அவ்வளவு தான் !உடனே வீட்டை அப்படியே திறந்து போட்டுவிட்டு மனைவியை அழைத்துக்கொண்டு பண்டரிபுரம் கிளம்பிவிட்டார்.

"போவதற்கு முன் நம்முடைய சொத்துக்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போவோமே" என்றார் மனைவி. "அப்படிச் செய்யக்கூடாது" என்றார் அவர்.

"என்னங்க இது , முன்னரும் அப்படித்தான் சொன்னீர்கள். இப்பொழுதும் அப்படியே சொல்கிறீர்களே" என்றார்."முன்னர் அந்தச் சொத்து என்னுடையது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதனால் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று சொன்னேன். இப்பொழுது எப்படியென்றால் அந்தச் சொத்து என்னுடையதல்ல.பண்டரிநாதனுடையது என்பதைத் தெரிந்து கொண்டேன். அதனால் அதை யாருக்கும் கொடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார். அப்படிப் புறப்பட்ட அந்த நவகோடி நாராயணன் யார் என்று நினைக்கிறீர்கள்?

அவர்தான் பின்னர் புரந்தரதாசராக மாறி பல கீர்த்தனைகளை எழுதினார்.

அவர்களுடைய கதை அப்படி யென்றால் நம்முடைய கதை இப்படியிருக்கிறது.

நம்ம ஆள் ஒருத்தர் வந்தார்.

" சேர், எங்க வீட்டுக்கார அம்மாவும்ஒருநாள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக மூக்குத்தியை கழற்றி ஒரு பெட்டியில் வைத்திருந்தார்.

மறுபடியும் திறந்து பார்க்கும் போது அது காணாமல் போய் விட்டது சேர்"என்றார்.

"ஐயையோ, அதன் பின் என்ன ஆச்சு?"என்றேன்.

"கடவுளை வேண்டிக் கொள் கிடைத்துவிடும்" என்றேன். அது போல் செய்தார். ஒருமாதம் கழித்து மறுபடியும் ஒருநாள் திடீரென்று அந்த பெட்டியில் அது வந்து விட்டது சேர்"என்றார்.

"ஆச்சரியமாக இருக்கிறதே" என்றேன்.

"இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே" என்றார்.

"எப்படி?"என்றேன்.

"அந்த மூக்குத்தியை நான் தான் எடுத்து ஒரு அவசரத் தேவைக்கு அடகுக்கடையில் வைத்திருந்தேன்"என்றார்.

அவர்-புரந்தரதாசர்.

இவர்-மனைவிக்கு நிரந்தரதாசர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக அனுமதி பெற்று பதிவு செய்யாத மாணவர்களுக்குப் பதிலாக புதியவர்கள்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

2009/2010ஆம்கல்வி ஆண்டிற் கான பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களில் இதுவரை பதிவு செய்யாதவர்களுக்கு பதிலாக அனுமதிக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 2009 / 2010 ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களில் சிலர் அதற்கான பதிவுகளை மேற்கொள்ளத் தவறியுள்ளனர்.

இம் மாணவர்களுக்குப்பதிலாக இசற்புள்ளியின்படி தகமை பெற்று அனுமதிக்காக காத்திருப்போர் பட்டியலில்(Waiting list) உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான பணிகள்பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2009/2010 ஆம் கல்வியாண்டிற்கான நாடளாவிய ரீதியில் 22ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அதிபர் பதவிக்கான வெற்றிடம் நிரப்புதல்

(யாழ்ப்பாணம்)

யா/வட இந்துமகளிர் கல்லூரி, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆகிய 1 AB பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஆகக் குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடைய அதிபர் தரத்தையுடைய பயிற்றப்பட்ட பெண் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்ள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம்திகதிக்கு முன்பு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும் படியும் ஆசிரிய சேவையிலுள்ளவர்களும் பட்டதாரியல்லாதவர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை எனவும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (6)

# இராசி பலன்

*19.08.2010*
*(ஆவணி 3, வியாழக்கிழமை)*
*தசமி பிற்பகல் 4.33 மணிவரை*
*கேட்டை பிற்பகல் 12.55 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-09.05 மணிவரை*

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் மாறும், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்

**இடபம்** பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலன் காண வேண்டிய நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், குடும்பத்திடையே அந்நியோன்யம் ஏற்படும்.

**கடகம்** பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், உடல் நலன் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**சிங்கம்** சிறப்பான நாள், மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழும் நாள், பிள்ளைகள் மத்தியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், பூமியால் இலாம் கிட்டும்.

**கன்னி** விருந்தினர்களை வரவேற்று வியப்படையும் நாள், வம்பு வழக்குகள் தீரும், ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு, தூரத்து சொத்துக்களால் நன்மை கிடைக்கும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடங்குவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரியோர் வீடு தேடி வருவர்.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்து சேருவர், வெளியூர் பயணமொன்று உருவாகலாம்.

**மகரம்** சுப விரயங்கள் கூடும் நாள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்** தனவரவு வந்து சேரும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதமான புத்தியால் பலரையும் கவருவீர்கள், அந்நிய தேசப்பயணம் அனுகூலம் தரும்.

**மீனம்** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் சம்பந்தமான புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள பெரியோரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வளவன்

# பேசும் படம்




பஸ் எப்போது வரும்...

காட்சி-அராலி வடக்கு

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 |
| தக்காளி | 70 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 90 | 80 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 40 | 40 | 45 |
| புடோல் | 40 | 30 | 30 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 60 |
| பயற்றங்காய் | 90 | 80 | 90 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 70 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 70 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | 50 |
| கீரை - 1 பிடி | 20-25 | 10 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30-35 | 35 |





2010 ஆம் ஆண்டு ஆங்கில மொழிமூல பரீட்சைக்குத் தோற்றும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் விஞ்ஞான பாடம் தொடர்பான விளக்கத்தை வளவாளரான யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி கே. சிவயோகன் வழங்குவதையும் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று முற்பகல் 10 மணிக்கு 'ஆறுபடையா? ஆற்றுப்படையா?' என்னும் விடயம் பற்றி ஆசிரியர் இரா செல்வவடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖

வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று மாலை 7 மணிக்கு 'உற்சவத்தில் தலையாயது மஹோற்சவம்' என்னும் விடயம் பற்றி நாயன்மார்கட்டு சைவ குருமணிகள் பயிற்சிக்கல்லூரிஅதிபர் சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

❖ ❖ ❖

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகுஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று 'பித்தா நீ செய்த சீலம்' என்னும் விடயம் பற்றி ஆசிரியர் த.நாகேஸ்வரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-29)

## மஹோற்சவம்

(கொழும்புத்துறை)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 18 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை இரதோற்சவமும் நடைபெறும்.

எதிர்வரும் 24ஆம்திகதி தீர்த்தத்திருவிழாவும் 25 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (6-4-51)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 5 ஆம் நாளான இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை திருமதி குமுதா உமாகாந்தான்(பாட்டு) , கே.பத்மநாதன் (வயலின்) , எஸ்.துரைரசா (மிருதங்கம்) ஏ.செல்வரத்தினம் (கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவலர்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்ச காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிமுதல் 6மணிவரை' என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் விடயம் பற்றி சைவப்புலவர் இராசையா சிறீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து அராலி கோமாதா, கோகுலம் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வுகளும்இடம் பெறவுள்ளன. (6-4)

## சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி கடனுதவி

(மாதகல்)

மாதகல் பிரதேசத்தில் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக, சுயதொழில் முயற்சியாளர்களுக்கு யாழ்.ஹற்றன் நஷனல் வங்கி கடனுதவி வழங்கவுள்ளது.

மாதகல் விவசாய விஸ்தரிப்பு நிலையத்தின் அனுசரணையோடு இவ் உதவி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 13 ஆம்திகதி மாதகல் விவசாய சம்மேளன மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது விவசாய விஸ்தரிப்பு நிலையத் தலைவர் வி.சிற்றம்பலம் கூறுகையில்,

மாதகல் பகுதியிலுள்ள சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் பயனாளிகள் ஒரு குழுவில் நால்வர் அல்லது ஐவர் கொண்ட குழுக்களாக இணைந்து இக் கடனுதவியைப் பெறமுடியும்.

விரைவில் இக் கடனுதவியை வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளலாமென்றும் ஒரு பயனாளிக்கு தலா ஐம்பதாயிரம்ரூபா கடன் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் பல சுயதொழில் முயற்சியாளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (6-2)




## பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

கரவெட்டி பிரதேச செயலக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக மேற்படி சங்கத்தின் செயலாளர் ம.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (6-4-51)

## பாவனைப் பொருட்கள் கையளிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி பகுதியில் இடம்பெயர்ந்து வாழுகின்ற மக்களுக்கு சொலிடார் நிறுவனத்தினால் ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்கள் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந் மக்களுக்கே இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பொதியில் சவர்க்காரம் உள்ளிட்ட பாவனைப் பொருட்கள் உள்ளடக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-4-43)

### சமுர்த்தி அதிகார சபையினால்

## காரைநகர் சமுர்த்திப் பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 66 ஆயிரம் ஒதுக்கீடு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதார மற்றும் வீட்டுத் திட்டத்திற்கென சுமார் ஐந்து இலட்சத்து அறுபத்தாறாயிரம் ரூபா சமுர்த்தி அதிகார சபையினால் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வாழ்வாதார மற்றும் வீட்டுத் திட்டத்திற்குமென 62 பயனாளிகள் காரைநகர் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வாழ்வாதார கருத்திட்டம் 2010 இற்கான ஒதுக்கீட்டில் கைத்தொழில் சந்தைப்படுத்தல் மீன்பிடி மற்றும் மிருகவளர்ப்பிற்காகவே இவ் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன

வாழ்வாதார கருத்திட்டம் கைத்தொழிலிற்காக காரைநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 3 பயனாளிகளும் காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 05 பயனாளிற்குமாக எட்டுப்பேருக்கு 94 ஆயிரத்து 50 ரூபாவும் வாழ்வாதார கருத்திட்ட சந்தைப் படுத்தல் திட்டத்திற்கு காரைமத்தி கிராம சேவையாளர் பிரிவில் 7 பயனாளிகளிற்கும் காரை வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவில் 1 பயனாளிக்கும் காரை தென்மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 1 பயனாளிக்குமாக ஒன்பது பேருக்கு 89ஆயிரத்து 100 ரூபாவும் வாழ்வாதார மீன்பிடி மற்றும் மிருக வளர்ப்பிற்கு காரை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 20 பயனாளிகளிற்கும் காரை வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 8 பயனாளிகளிற்கும் காரை மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 16 பயனாளிகளிற்குமாக 44 பேருக்கு 2இலட்சத்து 83ஆயிரத்து536 ரூபாவும் வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன் திரிய பியச வீட்டுத் திட்டத்தில் வீடுகட்டுவதற்கென காரை வட கிழக்கு பிரிவு பயனாளி ஒருவருக்கு 1 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த சமுர்த்தி அதிகாரசபையின் ஒதுக்கீட்டுடன் பயனாளிகளின் இன்னொரு மடங்கு பங்களிப்புடன் குறித்த வாழ்வாதார கருத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதார உதவிகள் அதிகாரசபை நிதிமூலமும் சுழற்சி முறை உதவி மூலமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-246)

## வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள், கட்டடங்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் மற்றும் கட்டடத் தொகுதிகள் புனரமைப்புச் செய்வதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வலி கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் தம்பையா நடராசா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் ஊரெழுப் பிள்ளையார் கோயில் வீதி, நீர்வேலி கேராவில் வத்தை வீதி, கோப்பாய் பெரியகுளம் வீதி, பத்தை மேனி பாரதிவீதி, உரும்பிராய் சேமன் புலம் வீதி, சிவன் வீதி மற்றும் கேராவில் வத்தை -முதலாம் இலக்க இணைப்பு வீதி ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் நீர்வேலி ஆயுள் வேதப் பகுதி ,உரும்பிராய் உப நூலக அலுவலகம் , புத்தூர் ஆயுர்வேத பகுதி, புத்தூர் விக்னேஸ்வரா சனசமூக நிலையம், அச்செழு வளர்மதி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி கலைமகள் சனசமூக நிலையம் ,கோப்பாய் காந்தி சனசமூக நிலையம் ஆகிய கட்டடத் தொகுதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக சபையின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (6-4-2-10)

# ஜப்பான் தொண்டு நிறுவனத்திடம் இலஞ்சம் கோரிய அமைச்சர்

## பாராளுமன்றில் அம்பலம்

அமைச்சர் ஒருவர் இலஞ்சம் பெற்றுக் கொள்ள மேற்கொண்ட முயற்சி பாராளுமன்றில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் ஒருவர் ஜப்பான் தொண்டு நிறுவனமொன்றிடம் இலஞ்சம் கோரியதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காட்டு யானைகளினால் ஆபத்துக்களை எதிர்நோக்கும் மக்களுக்கும் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் நோக்கில், திட்டமொன்றை ஆரம்பித்த ஜப்பான் தொண்டு நிறுவனமொன்றிடம் குறித்த அமைச்சர் இலஞ்சம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காட்டு யானைகளினால் ஆபத்துக்களை எதிர்நோக்கும் கிராம மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக 850 மில்லியன் ரூபாவினை குறித்த நிறுவனம் ஒதுக்கியிருந்ததாகவும் இந்தப் பணத்தில் எவ்வளவு,தரகுப் பணம் தமக்குக் கிடைக்கும் என குறித்த அமைச்சர், ஜப்பான் தொண்டு நிறுவனத்திடம் வினவியுள்ளார்.

இந்தத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில், குறித்த ஜப்பானிய தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கை விஜயம் செய்திருந்த போது அமைச்சர் இலஞ்சம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளதோடு இந்தச்சம்பவத்தினால் அதிருப்தி அடைந்த குறித்த ஜப்பான் தொண்டு நிறுவனம் ஒதுக்கப்பட்ட நிதியை தாய்லாந்து மக்களுக்கு செலவழிப்பதென தீர்மானித்தாக விஜயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான விடயங்களை அம்பலப்படுத்தும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேசத் துரோக முத்திரைகுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.(6-2)

# குருநகர் கடற்கரைவீதி புனரமைக்கப்படவுள்ளது

(குருநகர்)

மக்களின் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்ட குருநகர் கடற்கரை வீதி (பீச்றோட்) புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இவ்வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு 4 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வீதி அருகே அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளில் வீடுகளை அமைத்து, வசித்து வந்த 94 குடும்பத்தினருக்கு தொடர்மாடிக் கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில், கடற்கரைக்கு வடக்கே அமைந்துள்ள அரசகாணியில் இத்தொடர்மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக மாநகர சபை உறுப்பினர் ஏ.கிளபோடாசியஸ் தெரிவித்துள்ளார். (6-2-39)

# கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புதிய இடத்தில் ஆரம்பம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையானது தற்போது அம்பம் அரசினர் வைத்தியசாலை கட்டடத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

முன்பு இப்பணிமனை பருத்தித்துறை சுகாதார பணிமனையோடு இணைந்திருந்ததாகவும்; தற்போது கரவெட்டி மற்றும் பருத்தித் துறை சுகாதார பணிமனை பிரிந்து செயற்படத் தொடங்கியதையடுத்தே இப்பணிமனை புதிதாக அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனூடாக மக்களது சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதற்கு சுகாதாரப் பகுதியினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. (6-4-10)

# ஏர் பூட்டு விழா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இம்முறை விவசாயிகளுக்கான ஏர்பூட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது செவ்வியா தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

கமநலச்சேவை திணைக்ள அனுசரணையுடன் பூநகரி கமநலசேவையினரால் நடத்தப்படவுள்ள இவ்விழாவுக்கு கமநலசேவைத்திணைக்கள உயர் அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் அரசினால் மானிய அடிப்படையில் வழங்கப்படும் விதை நெல்லும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (6-2)

SUZUKI மற்றும் SUZUKI MARUTI நவீனமயப்படுத்தல் முகாம் யாழ்பாணத்திற்கு வருகிறது.

யாழ் மக்கள் மீதான அபிமானத்தால் AMW உங்கள் வாகனங்களை நவீனமயப்படுத்துவதற்கான புதிய நோக்குடன் உங்களை தேடி வருகிறது.



ஆகஸ்ட் 21 மற்றும் 22
9.00 a.m. மணி முதல் 5.00 p.m. மணி வரை
றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

- செய்கூலியில் 50% மட்டுமே அறவிடப்படும்.
- சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி வாகனங்களுக்கான இலவச பரிசோதனை அறிக்கைகள்.
- உங்கள் வாகனங்களுக்கான இலவச மதிப்பீடு.
- இன்னும் பல

*நிபந்தனைகளுக்கு உட்படும்

AMW வின் தகுதியுள்ள சிறந்த தொழினுட்பவியலாளர்களைக் கொண்டு நடாத்தப்படுகிறது.

வாகன உதிரிப்பாகங்களுக்கு விசேட விலைக்கழிவு

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI Count on us

AMW அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
துரித அழைப்பு 011 2 690099

www.cpm.lk

# நல்லூர் சிறுவர் பூங்காவை நவீனப்படுத்த நடவடிக்கை

யாழ். நல்லூர் சிறுவர் பூங்காவை மீள நிர்மாணஞ் செய்து நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் மேற்படி பூங்கா அமைந்துள்ள பகுதிக்குச் சென்ற அமைச்சர் பூங்காவின் நவீனமயமாக்கல் செயற்திட்ட மாதிரியை பார்வையிட்டதுடன் அப்பகுதி முழுவதையும் ஆராய்ந்தார். இந்நிகழ்வில் அமைச்சரின் செயலாளர் சிவஞானசோதி, யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (6)

# தமது பிரஜைகளுக்கான பண எச்சரிக்கையை தளர்த்துவது குறித்து கனடா ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலா மேற்கொள்வது தொடர்பாக தமது நாட்டு பிரஜைகளுக்கு வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் நீக்குவது குறித்து கனடா ஆலோசித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கனடிய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடியதாக கனடாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள கனடிய உயர்ஸ்தானிகருடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இலங்கையில் சுற்றுலா மேற்கொள்வது தொடர்பாக கனடிய பிரஜைகளுக்கு வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல்கள், ஆலோசனைகள் இதுவரை நீக்கப்படவில்லை எனவும் இந்த வழிகாட்டல், ஆலோசனைகள் குறித்து ஆலோசித்து வருவதாக கனடிய அதிகாரிகள் இலங்கை உயர்ஸ்தானிகருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போர்ச்சூழல் நிலவியதால் பல்வேறு நாடுகள் தமது பிரஜைகள் இலங்கையில் சுற்றுலா மேற்கொள்வது தொடர்பாக வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

மீண்டும் அமைதிச் சூழல் ஏற்பட்டதை அடுத்து அதிகமான நாடுகள் எற்கனவே அந்த வழிகாட்டல் ஆலோசனைகளை அகற்றுவதற்கும் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# வடமராட்சியில் கொள்கலன் ஐஸ் உற்பத்திநிலையம் அங்குரார்ப்பணம்

வடமராட்சி, பொலிகண்டியில் கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கடற்றொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை காரணமாக கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் இந்த ஐஸ் உற்பத்தி நிலையம் அமைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம், அமைச்சு அதிகாரிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் உட்பட பலர் பங்கு கொண்டனர். மேற்படி கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையமானது தேவைக்கேற்ற பிரகாரம் இடமாற்றம் செய்யப்படக்கூடியது என்பது விசேட அம்சமாகும். (6)

# மாதகல் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வெங்காய அறுவடை

(மாதகல்)

மாதகல் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வெங்காய அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

இம்முறை விவசாயிகள் பெருமளவில் பயிரிடப்பட்ட சிறிய வெங்காயம் எதிர்பார்த்த அளவு விளைச்சலை வழங்கவில்லையெனவும் இவை நோயினால் பீடிக்கப்பட்டு காணப்பட்டதால் இந்நிலைமை ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சிறிய அளவில் பயிரிடப்பட்ட பெரிய வெங்காயம் எதிர்பார்த்த அளவு விளைச்சலைத் தந்ததாகவும் தரமான பெரிய வெங்காயமானது ஒரு கிலோ முப்பத்தி ஏழு ரூபா தொடக்கம் நாற்பது ரூபா வரை கொள்வனவாளர்கள் தம்மிடமிருந்து பெற்றுச் செல்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் நாற்பத்தைந்து ரூபாவுக்கு மேல் பெரிய வெங்காயம் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள்

யாழ்.மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனக்கூட்டம் கடந்த 12ஆம் திகதி உள்ளூராட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலையங்களை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடனும் சமாசங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணிகளை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள் முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிமுதல் முற்பகல் 11 மணி வரை யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் தங்கள் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களில் சமாசங்களுடன் இணைந்து சிரமதானப்பணியில் பங்கு கொள்ள வேண்டும் எனவும் தற்போது மக்களிடையே வேகமாகப் பரவி வரும் கொடிய நோயான டெங்கைப்பற்றி சனசமூக நிலையங்கள் மக்களுக்கு கூட்டங்கள் மூலம் விளக்கமளிக்க வேண்டும் எனவும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனச் செயலாளர் கா.கதிர்காமநாதன் கேட்டுள்ளார்.

அத்துடன் குறித்த தினத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் எல்லா சனசமூக நிலையங்களையும் பங்கு பெறச்செய்வதோடு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தித்திட்டம் சம்பந்தமான அறிக்கை பெற்றுத் தரவேண்டும் எனவும் குறித்த விடயத்தில் சமாச நிர்வாகத்தை ஊக்கப்படுத்துமாறும் பிரதேச செயலாளர்களை அவர் கேட்டுள்ளார். (6)

# நீர்வேலி கைத்தொழில் நிலையத்திற்கு நிதியுதவி

நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழில் நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்நிலையத்தை முதல் கட்டம் செப்பனிடும் பொருட்டு ஆரம்ப நிதியாக ஒரு இலட்சம் ரூபாயினை மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக வழங்கினார். (6)

# அலுவலக திறப்பு விழா

(திருநெல்வேலி)

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அபிவிருத்தி அமைப்பின் அலுவலக திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை தும்பளை நெல்லண்டையில் வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ஏ.தவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், கடற்றொழிலாளர்கள் சங்கப்பிரதிநிதிகள், அரச ஊழியர்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் அமைப்புக்களின் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4-43)

# ராஜஸ்தானில் செல்போன் வெடித்து ஒருவர் பலி

(ஜெய்ப்பூர்)

பாகிஸ்தான் மாநிலம் கோரா நகர் அருகே உள்ள வனப்பகுதியில் கடந்த 16ஆம் திகதி மர்மமான முறையில் வாலிபர் ஒருவர் இறந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது ,25 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் காதுகிழிந்து இரத்தம் கொட்டிய நிலையில் இறந்து கிடந்தார்.

அவரது மார்புப்பகுதியிலும் தீக்காயம் ஏற்பட்டிருந்தது. பிணத்தின் அருகே கருகிய நிலையில் கையடக்கத்தொலைபேசி கிடந்தது. விசாரணையில் அவர் கையடக்கத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த போது திடீரென வெடித்துச் சிதறி பலியானது தெரிய வந்தது. (6-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

நேற்றைய தொடர்ச்சி....

வெள்ளை சாய்தலுக்கு வெள்ளைப் பூண்டை தோல் நீக்கி சாறு எடுத்து 30 மில்லி, அளவு எடுத்து 10 மில்லி தேநீர் கலந்து காலை, மாலை கொடுக்க மாறும். குழந்தைகட்கு ஏற்படும் மந்தக் கோளாறுகளுக்கு வெள்ளைப் பூண்டுடன் , ஓமம், வசம்பு சரக்குகளை சம அளவு ஒன்றாக சேர்த்து இடித்து பின்பு மொத்தமாகச் சாறு பிழிந்து 1/2 தேக்கரண்டி வீதம் 3 வேளை கொடுக்க மந்தக் கோளாறு தீரும். இதனை 3 நாட்கள் கொடுக்கலாம்.

✦ ஒற்றைத் தலைவலி குணம் பெற:

வெள்ளைப்பூண்டு , தேவதாருக்கட்டை, சந்தனம் மற்றும் பால் சாம்பிராணி ஆகியவை ஒவ்வொன்றிலும் 20 கிராம். வீதம் எடுத்து ஒன்றிரண்டாக நசுக்கி 300 மில்லி நல்லெண்ணெயில் இட்டு ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அன்றே, காலையில் நன்றாக தலையில் தேய்த்து சிறிது நேரம் ஊற வைத்து பின் இளஞ்சூட்டு நீரில் சிகைக்காய் தூள் தேய்த்து தலை குளித்து விடவேண்டும். இவ்வாறு ஒன்று விட்டு ஒருநாள் 3 தடவைகள் தலை முழுகிவர கடுமையான ஒற்றைத் தலைவலி நீங்கிவிடும்.

✦ உடல் வலி அளவு நீங்க:

அறைக் கீரையுடன் பூண்டும், மிளகும் அதே அளவு சேர்த்து கடைந்து இரவு நேரத்தில் சாப்பிட அயர்வு , வலி நீங்கி உடல் இலேசாக ஆகிவிடும்.

✦ குடல் புழுக்கள் நீங்க:

தோல் நீக்கப்பட்ட வெள்ளைப்பூண்டுடன் குப்பைமேனி இலையை சேர்த்து நசுக்கி சாறு எடுத்து 10 தொடக்கம் 20 மில்லி அளவு குழந்தைகட்கு கொடுக்க மலப்புழுக்கள் வெளி வந்துவிடும்.

✦ தாய்ப்பால் சுரக்க:

ஒரு கோப்பை பசும்பாலில் 2 வெள்ளைப்பூண்டு பற்களை போட்டுக் காய்ச்சி அருந்த தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

✦ அஜீரண கோளாறுகளுக்கு கையாந்தகரை இலைகளுடன் அதேயளவு பூண்டு, மிளகு சேர்த்து அரைத்து பாக்கு அளவு எடுத்து சாப்பிட அஜீரண கோளாறுகள் தீரும்

✦ ஆஸ்மா

நோயாளிகள் வெள்ளைப்பூண்டு, திப்பிலி ஒவ்வொன்றிலும் 5 கிராம் அளவு சேகரித்து தூதுவளை, கண்டங்கத்தரி ஆகியவற்றின் இலை வகைக்கு கைப்பிடி அளவு சேர்த்து தட்டி ஒரு லீற்றர் நீர் விட்டு காய்ச்சி பாதியளவாக நீர் சுண்டியதும் இறக்கி, வடித்து 30 மில்லி தொடக்கம் 60 மில்லி வரை காலை, மாலை கொடுக்க இருமல் , ஆஸ்மா தீரும்.

✦ இரத்த அழுத்தம் குறைய:

ஒன்றாகக் காய்ச்சிய ஆடை நீக்கிய பசும்பாலில் அடுப்பிலிருக்கும் போதே திடமான 3 பூண்டு பற்களை தோலுரித்து துண்டு துண்டாக நறுக்கி அதில் போட்டு சாப்பிட படிப்படியாக இரத்த அழுத்தம் கட்டுப்படும்.

✦ இடுப்பு வலி நீங்க:

பூண்டு 20 கிராம், கஸ்தூரி மஞ்சள் 20 கிராம், ஒரு கைப்பிடியளவு நொச்சியிலை ஆகியவற்றைச் சேர்த்து, நசுக்கி 200 மில்லி வேப்பெண்ணெயில் இட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து, ஆறவிட்டு நோவுள்ள பகுதியில் ஒன்றாக தடவி உருவி விடவேண்டும்.

✦ உரித்த வெள்ளைப்பூண்டு பற்கள் 20 எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து இச்சாற்றில் சிறிது உப்பையும் சேர்த்து ஊறவைத்து தினசரி 2 முதல் 4 ஊறிய பூண்டு பற்களை சோற்றுடன் சேர்த்து சாப்பிட குடலில் ஏற்படும் வாய்வுத்தொல்லை தீரும்.

✦ பொன்னாங்காணிக் கீரையுடன் 10 பல்பூண்டு 1 பிடிபாசிப்பருப்பு சேர்த்து வேக வைத்து தினசரி சாப்பாட்டில் சேர்த்து சாப்பிட்டு வர மூலநோய் படிப்படியாக குணமடையும்.

குறிப்பு

பூண்டினை உலர்சரக்காக நாம் அன்றாடம் பயன்படுத்தி வருகிறோம். பூண்டுடன் சேரும் மற்றைய மூலிகை சரக்குகளை தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(முற்றும்)

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# மரண அறிவித்தல்

நெல்லியடி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பிரபல தொழில் அதிபரான

## திரு சண்முகம் விசுவநாதர் முருகேசு

Proprietor: S.V.murugesu,
154,Hospital Road, Jaffna.

Chairman:- S.V.M.(Pvt) Ltd,
122,Dam Street, Colombo - 12.



காரைநகர் களபூமி இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் இல. 17/1, டி. பொன்சேகா றோட், கொழும்பு - 05 வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விசுவநாதர் முருகேசு அவர்கள் 16.08.2010 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற விசுவநாதர் பார்வதி தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும்காலஞ்சென்ற கந்தையா, ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான லக்சுமிபிள்ளை, இராசம்மா, சுந்தரம்மா, வேலுப்பிள்ளை, சதாசிவம், கந்தையா, இராமநாதர் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தங்கராஜா, இராஜேஸ்வரி, நடராஜா, தங்கரத்தினம், பூமணி, குணரத்தினம், சதாநந்தன், சிவாநந்தன் ஆகியோரின் ஆருயிர் தகப்பனும், அம்பலவாணர், சறோஜினி, நாகேஸ்வரன், பத்மராணி, இராசமலர், உமாதேவன், பத்மினி, சர்வேஸ்வரி, சுசிலாதேவி ஆகியோரின் மாமனாரும், இளங்கோ, சங்கர், சுரேகா, தர்மிலா, ஆரூரன், சஞ்சிவன், மேனசா, மகிலினி, தாரணி, சிவசங்கர், சியாம்சங்கர், தயந்திகா, லக்சிகா, சர்மிகா, ராகுல் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 19.08.2010 வியாழக்கிழமை இன்று அவரது கொழும்பு இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் மு.ப 11.00மணிக்கு கனத்தை மைதானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:-

தங்கராஜா :- இலங்கை தொலைபேசி : 0094114378676
நடராசா:- 094772240153
தங்கரெட்ணம் :- 0094778177805
குணரத்தினம் :- 0094114378675, செல்லிட பேசி :-0094777325418
சதானந்தன் :- 0094777482265
சிவானந்தன் :- 0094777325418

தகவல்
பிள்ளைகள்

(சி-850)

# பேஸ்புக், ஓர்குட் பாதுகாப்பாக இயக்குவது எப்படி?



(சென்றவாரத் தொடர்ச்சி)

தெரியாத நபர்களை உங்கள் நட்பு வட்டத்தில் இணைத்துக்கொள்வது வம்மை விலை கொடுத்து வாங்குவது போல, வழக்கறிஞரான உங்களது வலைப் பதிவில் குற்றாலக் குடி கொண்டாட்டங்கள் முக்கியம் இல்லை.அதெல்லாம் ,தேவை இல்லை, பிரதர்! என் வாழ்க்கையே ஒரு திறந்த புத்தகம் ! என்று ஜல்லியடிக்கத் தோன்றினால், உங்களுக்கு ஒரு கேள்வி... அடுத்த வாரம் நீங்கள் வேலைக்கான . நேர்முகத் தேர்வில் அமர்ந்திருக்கும் போது, நீங்கள் பிரசுரித்திருக்கும் தகவல்கள் உங்களை தர்ம சங்கடத்தில் நிறுத்துமா?

அதேசமயம் உங்களை ஒரு பிரண்டாக நிலை நிறுத்தவும் ட்விட்டர் (www. twitter.com) , கூகுளின் பஸ்ஸ் (www. google .com/buzz) போன்ற கணநேர இணையத்தளங்கள் (Real timeweb) உதவும். பொதுவாக, நீங்கள் படித்த அல்லது பதிப்பித்தவற்றில் உரலிகளை இதில் கொடுப்பது நல்லது, முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கணநேர இணையத்தளங்களில் தவறுகளைத் திருத்திக்கொள்வதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு.

காரணம், இவற்றை அடிப்படையாக வைத்துப் பல்வேறு தளங்களில் கட்டப்பட்டு இருப்பதால், உங்களது பதிவு உங்களுக்கே தெரியாத பலதளங்களில் பிரதி எடுக்கப்படும். அதுமட்டுமல்ல, உங்களது பதிவை நீங்கள் சரிசெய்வதற்கு முன்னால், வேறொருவர் Ret weet செய்யமுடியும். ஆகப் பதிவுசெய்வதற்கு முன்னால் பலமுறை யோசித்து அந்த Submit பட்டனை அழுத்துங்கள்.

**செய்**

பிடிக்காத வலைப்பபதிவுகளுக்குப் பின்னூட்டம் எழுத வேண்டியிருந்தால், மரியாதையுடனான தொனியுடன் எழுதுங்கள். தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே ஒன்லைனில் இட்ட வடு.

எவருடைய நட்பு வட்டத்தில் (Social Graph) சேர விரும்பி அழைப்பு அனுப்பி அதை அவர் ஏற்றுக்கொண்டால், சுருக்கமாக நன்றி நோட் ஒன்று அனுப்புங்கள். கடினமான கடவுச் சொல்லைத் தேர்ந்தெடுங்கள்.உங்கள் பெயரையே கடவுச் சொல்லாக வைப்பது, படுமோசமான ஐடியா. சில மாதங்களுக்கு ஒருமுறை கடவுச் சொல்லை மாற்றி விடுங்கள்.

எல்லாப் பதிவுகளும் எல்லோருக்கும் (Everyone) தெரியும் விதத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.சில பதிவுகள் உங்களது நட்பு வட்டத்துக்கு. சில நண்பர்களின் நட்பு வட்டங்களுக்கு. சில உலகில் உள்ள அனைவருக்கும். தெளிவாகப் புரிந்து பிரசுரியுங்கள். தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு சோஷியல் மீடியாவில் குறைவு!

**செய்யாதே**

ரொம்பவும் பேர்சனலான விடயங்களைப் பகிர்ந்து கொள்ளாதீர்கள். உங்களது நட்பு வட்டம் மிகச் சிறியதாக, உங்கள் நம்பிக்கைக்குஉரியதாக இன்றைக்கு இருக்கலாம்.ஆனால், எதிர்காலத்தில் அது விரிவுடையும்போது, இந்தத் தகவல்கள் தவறான வழியில் பயன்படுத்தப்படும் வாய்ப்புகள் அதிகம்.

அறிமுகம் இல்லாதவர்களிடம் இருந்து நட்புக்கான அழைப்புகள் (Friendship Requests) வரும்போது உடனடியாக அவர்களுடன் மவுஸ் குலுக்கிக்கொள்ளாதீர்கள். அவர்களது நட்பு வட்டாரத்தில் (Friends of friends) உங்களுக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்பதைப் பாருங்கள்.

**கடவுச் சொல்லை யாருக்கும் கொடுக்காதீர்கள்**

கண்ணில் தெரியும் குழுக்களில் (Groups) எல்லாம் சேராதீர்கள். உங்களது அரசியல், சமூக, கல்விப் பிரிவு சம்பந்தமான குழுக்களில் மட்டுமே சேருங்கள். சமூக வலைத்தளங்களில் இருக்கும் பெரும்பாலான குழுக்கள், வணிக உள்நோக்கம் கொண்டவை. மானாவாரியாக எல்லாவற்றிலும் சேரும் உங்களை spam செய்யும் வாய்ப்பை அவர்களுக்கும் கொடுப்பது போன்றது. (முற்றும்)

## எவ்1 கீயை அழுத்தாதீர்கள்!

ஏதேனும் இணையத்தளம் ஒன்றினைப் பார்க்கையில், அதில் எப்1 (F1) கீயை அழுத்தவும் என்று செய்தி தரப்பட்டுள்ளதா ; உடனே அதனை அழுத்த வேண்டாம் என மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரிக்கை வழங்கியுள்ளது.




இதன்மூலம் பல இணையத்தளங்கள் கணனி பயன்படுத்துவோரை மோசமான தளங்களுக்கு இழுத்துச் சென்று, அவர்களில் கணனியில் பேர்சனல் தகவல்களைகத் திருடும் புரோகிராம்களைப் பதிக்கின்றன. இதனால் தங்கள் கணனிகளில் உள்ள செக்யூரிட்டி சிஸ்டம் செட்டிங்குகளில்,அவற்றை ' high' என்ற அளவில் அமைக்குமாறும் மைக்ரோசொப்ட் கேட்டுக்கொண்டுள்ளது.

இதன்மூலம் ActiveX Controls மற்றும் Active Scripting ஆகியவற்றைத் தடை செய்திடமுடியும்.இந்த மால்வெயர் பெரும்பாலும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரைப் பயன்படுத்துவோரையே இலக்காகக் கொண்டு இயங்குவதாகவும் மைக்ரோசொப்ட் எச்சரித்துள்ளது.விண்டோஸ் 2000 விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விண்டோஸ் சேர்வர் 2003 ஆகியவற்றைப் பயன்படுத்துவோரே இதற்கு இலக்காகுகின்றனர்.

இந்த மால்வெயர் பாதித்த கணனியில், இணையத் தளங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருக்கையில் எப் 1 அழுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அழுத்தியுவுடன் கணனி ஹைஜாக், செய்யப்பட்டு மால்வெயர் புரோகிராம் பதியப்படுகிறது. இதற்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் தீர்வு ஒன்றை வழங்கியுள்ளது.லிங்கட் தரப்பட்டாலோ அல்லது பாப் அப் விண்டோ வந்தாலோ உடனே CRTL+ALT+DEL கீகளை அழுத்தவும். உடனே கிடைக்கும் கட்டத்தில் Internet Explore task என்ற பிரிவு அல்லது உங்கள் பிரவுசர் பிரிவினைத் தேர்ந்தெடுத்து டெலீட் கீயினை அழுத்தவும்.

பின் மீண்டும் பிரவு சரை இயக்கிப் பார்த்துக்கொள்ள லாம்.




## இணையப் பயன்பாடு சுவையான தகவல்கள்

உலகில் மொத்தம் 180 கோடிப் பேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். இதில் 32 நாடுகளில் ஒரு கோடிக்கும் மேல் இணையப் பயனாளர்கள் உள்ளனர். இந்த வரிசையில் முதல் பத்து நாடுகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 117 கோடி .அதாவது உலக இணையப் பயனாளர்களில் 65 % பேர் இந்த பத்து நாடுகளில் உள்ளனர். அடுத்த பத்து நாடுகளையும் சேர்த்து 20 நாடுகளில் உள்ள இணையப் பயனாளர் எண்ணிக்கை 147 கோடி. அதாவது மொத்தத்தில் 82% சீனாவும் அமெரிக்காவும் இணைந்து முதல் 15 இடங்களில் உள்ள நாட்டின் பயனார்களில் பாதிப்போர் எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. ஒரு நாட்டின் மக்கள் தொகை அடிப்படையில் அதிக எண்ணிக்கையில் இன்டர் நெட்டினைப் பயன்படுத்துவோர் உள்ள நாடுகளில் முதல் இடத்தினை பிரிட்டன் (82.5%) கொண்டுள்ளது. அடுத்தது தென்கொரியா (81.1%), மூன்றாவதாக ஜேர்மனி (79.1%) ஜப்பான் 78.2% மக்களுடன் அடுத்த இடத்தில் உள்ளது. அமெரிக்க மக்களின் எண்ணிக்கையில் 76.3 பேர் இன்டர்நெட் பயன்படுத்துகின்றனர்.

முதல் 20 நாடுகளில் 7 நாடுகள் (35%) ஆசியாவைச் சேர்ந்தவை. ஐந்து நாடுகள் ஐரோப்பாவைச் சேர்ந்தவை. முதல் 20 இல் ஆங்கிலம் பயன்படுத்தப்படும் நாடுகள் மூன்று . அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி மற்றும் பிரிட்டனில் ஏற்கனவே இன்டர்நெட் பயன்பாடு ஏறத்தாழ அதிக பட்சம் உள்ளதால் அடுத்த வளர்ச்சி சீனா பிரேசில், இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் ரஷ்யாவில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளிவந்தது. அமெரிக்கர்கள் இன்டர் நெட்டைக் கண்டு பிடித்தார்கள். ஜப்பானியர்கள் இதைத் தூக்கிக்கொர்ணடு ஓடி விட்டார்கள் என்று. ஓடியது மட்டுமல்ல அதில் பல அதிசயத்தக்க மாற்றங்களையும் கொண்டு வந்தனர்.இன்று உலகில் 7.8 Mbps வேகத்தில் இணைய இணைப்பினைக் கொடுக்கும் மூன்று நாடுகளில் ஜப்பானும் ஒன்று. மிகவும் குறைந்த கட்டணத்தில் அதிக டேட்டா வேகத்தைத் தரும் நாடாக ஜப்பான் உள்ளது. மிகப் பெரிய திரை, துல்லியமான படங்கள், ஒலியின் தன்மை எனப் பல பிரிவுகளில் அமெரிக்கர்களை ஜப்பான் மிஞ்சிவிட்டது. ஜப்பான் மக்கள் தொகை 12.68 கோடி இன்டர்நெட் பயன்படுத்துபவர்கள் 9.91 கோடி.

## புதிய வைரஸ் எதிர்ப்பு தொகுப்பு

அவிரா , அவாஸ்ட், நோர்டன்,ஏவிஜி என எத்தனை இலவச அண்ட்டி வைரஸ் பதிப்புக்களை மக்கள் பயன்படுத்தி வந்தாலும், இவற்றையும் மீறி ஏதாவது நடந்து விடுமோ என்று தான் நாம் அஞ்சவேண்டியுள்ளது. ஏனென்றால் நாளுக்கு நாள் புதிய கோணங்களில், வடிவங்களில், வைரஸ்கள் உருவாக்கப்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் புதிய வகை அண்ட்டி வைரஸ் தொகுப்பு முறை ஒன்றினை அண்மையில் காண நேர்ந்தது. இது அண்மையில் பரவி வரும் கிளவுட் கணனி முறையைச் சேர்ந்ததாகும்.ஆனால் முற்றிலும் இலவசமே. இதனுடைய பெயர் panda cloud Antivi rus. இதன் முதல் சிறப்பு என்னவென்றால், வைரஸ் டெபனிஷன் எனப்படும் குறியீடுகள் நம் கணனி யில் பதியப்படுவதில்லை. அவை பண்டா சேர்வரி லேயே இருக்கும்.இவை அனைத்தும் இதன் சேர் வரிலேயே இருப்பதால் அப்டேட் செய்யப்படுவதும் அங்கேயே தான்.எனவே தாமதமாக அப்டேட் என்ற பேச் சிற்கே இடமில்லை. லேட்டஸ்ட் வைரஸ் அப் டேட் நாம் செய்யவில்லையே என்ற பயமும் தூக்கமில்லா இரவுகளும் நமக்கு இல்லை.

அத்துடன் இந்த அண்டி வைரஸ் புரோகிராமினை சர்வதேசத்தில் ஒரு கோடி பேருக்கு மேல் பயன்படுத்தி வருகின்றனர். எனவே எந்த ஒரு கணனியில் ஒரு வைரஸ் கண்டறியப்பட்டாலும், உடனே அது பண்டா சேர்வருக்கு அனுப்பப்பட்டு, உடனடியாகத் தீர்வு காணப்படுகிறது. வைரஸ் காணப்பட்ட சில நிமிடங்களில் அதனைத் தீர்த்துக் கட்டும் தொகுப்பு தயாராகிவிடுகிறது. எனவே தற்போதைக்குப் பயன்படுத்தப்படும்இலவச அண்ட்டி வைரஸ் மற்றும் கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் அண்டி வைரஸ் தொகுப்புகளில் இது மிகவும் சிறந்ததாகவே தெரிகிறது.

இலவசம் என்பதால், இறக்கிப் பயன்படுத்திப் பார்க்கலாமே! http:// www. cloudanti virus.com/en/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் இதனைக் காணலாம். இதற்கான அழகான விளக்க வீடியோவும் இதில் தரப்பட்டுள்ளது இதன் சிறப்பு .

இல்லை எனக்கு வழக்கமான அண்டி வைரஸ்தான் வேண்டும் என நீங்கள் விரும்பினால், பத்து கோடிப் பேருக்கு மேல் பயன்படுத்தும் அவாஸ்(Avast) மற்றும் அதே போலப் பலரால் பயன்படுத்தப்படும் அவிரா (Avira) ஆகிய தொகுப்புகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம்.


அவாஸ்ட் தேவைப்படுபவர் கள் செல்ல வேண்டிய இணையத்தள முகவரி http:// www.avast.com/freeanti virus download. அவிரா வேண்டும் என்றால் http:// www.softpedia.com/prog Download/ AntiVirpersonal Edition Download 6527.html என்ற முகவரிக்குச் செல்லுங்கள்.

# ஈழத்தவர் வரலாறு 9

## 2.வரலாற்றுதய காலத் தமிழ் மன்னர்கள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கி.மு. 483 ஆம் ஆண்டு, தாமிரபரணியில் வந்திறங்கிய விஜயனும் அவனது தோழர்களும் தென்னிலங்கையில் வாழ்ந்த இயக்கத் திராவிடரை வெற்றிகொண்டு பல குடியேற்றங்களை நிறுவிக் கொண்டனர். தாமிரபர்ணியின் இயக்ககுலத் தலைவியாக விளங்கிய குவேனி என்பவள், அதற்குத் துணைபோயினள். விஜயனும் தோழரும் இலங்கைக்கு வந்து குடியேற்றங்களை அமைத்த விதம் மகாவம்சத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.



ஆனைக்கோட்டையில் (யாழ்ப்பாண மாவட்டம்) 1980 இல் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஆதி இரும்புக்காலக் குறுநில மன்னன் (கோ) ஒருவனுடைய சவ அடக்கம். இப்படியான குறுநிலத் தலைவர் ஒருவனுடைய அடக்கம் தென்னிந்தியா – இலங்கைப் பிராந்தியத்தில் வேறு எங்காவது கிடைக்கவில்லை. இத்தலைவனுடைய பெயர் பொறித்த முத்திரையும் அடக்கத்தில் கிடைத்தது. இந்த அகழ்வாய்வை இந்நூலாசிரியரின் தலைமையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓர் ஆய்வுக்குழு நடத்தியது.

**2.1 சிங்ஹல விஜயன் வருகை**

வங்கதேச இளவரசி ஒருத்தி அரண்மனையை விட்டு வெளியேறி மகதநாடு நோக்கிச் சென்ற வணிகக்குழுவுடன் பயணப்பட்டாள். காட்டுவழியில் எதிர்ப்பட்ட சிங்கம் ஒன்று வணிகர்களைக் கொன்றுவிட்டு அவளைக் கவர்ந்து சென்று, இணைந்தது.

அதனால், சிங்கபாகு, சீகசிவிலி என இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். சிங்கபாபுவுக்குப் பதினாறு வயனதானபோது அவன் தந்தையான சிங்கத்தைக் கொன்று தனக்குரியமையான வங்கநாட்டிற்கு மன்னனான். தனது மனைவியாகத் தன் சகோதரியை மணந்து கொண்டான். சிங்கபுர என்ற ஒரு நாட்டைத்தாபித்துக் கொண்டான். அவர்களுக்குப் பதினாறு தடவைகளில் இரட்டையராக முப்பத்திரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் விஜயன் என்பவனாவான். இரண்டாமவன் சுமித்தன்.


விஜயன் மிக்க கொடூரமான நடத்தைகளையுடையவன். அவனும் அவனது தோழர்களும் தமது நாட்டு மக்களுக்கு மிகுந்த இன்னல்களைப் புரிந்தனர். இவனுடைய கொடிய செயல்களைக் கண்டு கோபமுற்ற நாட்டு மக்கள் அவனைக் கொன்று விடுமாறு மன்னனை வேண்டினார்கள். மன்னன் அவனைப்பலமுறை எச்சரித்தும் பயனற்றுப் போகவே, விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறு பேரையும் பிடித்து, அவர்களது தலையில் அரைப்பங்கு தலைமயிரை வழித்து, கலமொன்றிலேற்றி கடல்வழி அனுப்பி விட்டான். அவர்களின் கப்பல் இலங்கையின் தாமிரபர்ணிக் கரையை வந்தடைந்தது.

விஜயனின் கதை முற்று முழுதான கட்டுக்கதையாகும். விலங்கு ஒன்றுக்கும் மனித மகள் ஒருத்திக்கும் பிறந்த மன்னன் ஒருவனின் வழிவந்தவர்களாக விஜயனைக் காட்டுவதும், சிங்கள மக்களின் பரம்பரை அவ்வாறான 'சிங்கம்' ஒன்றின் வழியானது என்று கூறுவதும் உண்மையில் சிங்கள மக்களுக்குப் பெருமை சேர்ப்பதாகாது. விஜயனின் கதை சிங்கள மூதாதையினரின் வருகையைக் குறிக்கும் குறியீடாகக் கருதலாம்.

எனினும், ' இக் கட்டுக்கதையின் தோற்றத்திற்குப் பௌத்த மத ஜாதகக் கதைகளே கருப்பொருளாக அமைந்தனவென வரலாற்றறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்'

தாமிரபர்ணியில் வந்திறங்கிய விஜயன், இயக்கத்தலைவியான குவேனியை மணந்து கொள்கின்றான். இவர்களது திருமணவிழா இயக்க மக்களது கிறிஸ்தவத்து நகரில் நிகழ்ந்தது. திருமணக் கொண்டாட்டத்திற் கென வந்திருந்த இயக்கர் அனைவரையும் குவேனியின் ஒத்தாசையுடன் விஜயனும் தோழர்களும் அழித்தொழித்தனர். குவேனி என்ற திராவிட மூதாதைப்பெண் தனது காதல் போதையால் செய்த தவறால் இயக்க மக்களில் ஒருபகுதியினர் அழிந்தொழிய நேரிட்டது.

குவேனியின் ஒத்தாசையுடன் இயக்க இன அழிப்பு நிகழ்ந்து போனது. அதன் பின்னர் விஜயனுடைய அமைச்சர்கள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு இடத்திற் குடியேற்றங்களை அமைத்து அக்குடியேற்றங்களுக்குத் தத்தமது பெயர்களை இட்டுக்கொண்டனர். அனுராத என்ற அமைச்சினால் மல்வத்து ஓயாவுக்கு (அருவியாறு / கதம்ப நதி அண்மையில் அமைக்கப்பட்ட குடியேற்றம் அனுராதகம எனப்பட்டது.



கந்தளாய் விஜயராஜ ஈஸ்வர கோயிலின் அழிபாடுகளிடையே ஒரு தமிழ்க் கல்வெட்டு.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

அனுராதகமத்திற்கு வடக்கே கணதற ஓயாவிற்கு அண்மையில் , உபதிஸ்ஸ என்ற அமைச்சனால் அமைக்கப்பட்ட குடியேற்றம் ,உபதிஸ்ஸகம எனப்பட்டது. கலாஓயா (கோணா நதி முகத்துவாரத்திற்கு அண்மை யில் உறுவெல என்ற அமைச்சனால் அமைக்கப்பட்ட குடியேற்றம் உறுவெலகம எனப்பட்டது.

(தொடரும்)

---

# சைவசித்தாந்த முத்தியும் சங்கர வேதாந்த முத்தியும்

## ஓர் ஒப்பீட்டாய்வு 3

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர் நா.ஞானகுமாரன்
பீடாதிபதி ,கலைப்பீடம் ,
யாழ்.பல்கலைக்கழகம்

*முத்தி தனக் குபாயங்க ளநேகமுள வவற்றின்*
*முதலாகு மூன்றவைகள் மொழியுங் காலை*
*பக்தியுடன் பிரபக்கி ஞான மென்று*
*பகருமிவற் றுள்ஞானப் பான்மை சொல்லில்*
*தத்துவரூபங்கள் தன் தரிசனங்கள் சுத்தி*
*சாரும்வினை மாயைமல தத்துவங்க ளுடனே*
*இத்தைய பாசத்தை உடைய வான்மா*
*விலக்கணங்கள் தரிசனங்கள் சுத்தி யென்றும்*
*நித்தனுருத் தரிசனம்பின் யோக போக*
*நிலையென்றுந் தசவிதமா நிகழ்த்து நூலே*

எனும் வகையில் தசகாரியங்களான தத்துவ ரூபம், தத்துவ தரிச னம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகிய வழிப்படி முறையில் ஞான மார்க்கத்தை கைக்கொள்ளுதலும் அதற்று அழுத்தம் கொடுக்கப்பட்டிருத் தலும் காண்லாம்.பொதுவில் சித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்கள் வழி இறைவனை அடைதல் சாத்தியமென எடுத்தாளுகின்றது. இதனைச் சிவஞான சித்தியார்

*"...அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத*
*சிரப்பொருளை மிகத் தெளிந்தஞ் சென்றாற் சைவத்*
*திறத்தடைவர் இதிற் சரியை கிரியா யோகஞ்*
*செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"*

என விளக்கி நிற்றலும் காணலாம்[1] இதனையே பிற்பட

*"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்*
*தாசமார்க் கம்என்றுஞ் சங்கரனை யடையும்*
*நன்மார்க்கம் நால் அவைதாம் ஞான யோக*
*நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்"*

எனவும் எடுத்துரைக்கிறார். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் பரிணாமவளர்ச்சியில் முத்தியெனும் பழக்கத்திற்கு தாயுமானவரால் ஒப்பிட்டு நோக்கப் படுவதும் நயக்கத்தக்கது.

இவ்வகையில் சரியை, கிரியை, யோகம், எனும் நிலைகளிலும் பார்க்க இறுதியாகச் சுட்டப் பெற்ற ஞானமானது உயர்ந்ததென்பது பெறப்படும். சரியை என்பது கோயில் தொண்டாக எடுத்தாளப்படும். இதனை மறு வார்த்தையில் சிவத்தொண்டாகவும் சிவ வினையாகவும் விளக்கி நிற்கலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களுள் சரியை என்பது புறநிலை வழிபாட்டிற்குத் தக்கதோர் உதாரணமாகும். புறநிலை வழிபாடானது தடத்தநிலையை சிவனின் உருவ வழிபாட்டை அடிஆதாரமாக கொண்டுள்ளது.

அருவுருவமும் அருவமும் ஆகிய நிலைகளில் இறைவனை வழிபடுகின்ற சிந்தனைப் பக்குவத்திற்கு ஆரம்ப நிலைப் படியாக சரியை மார்க்கம் அமைகின்றது. சரியையானது கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுகிடுதல், மலர் கொய்து மாலை கட்டு தல், சிவனைப் புகழ்ந்து பாடுதல் போன்ற எளிய தொண்டுகளை உள்ளடக்கியதாகும். இறைவனை உருவ நிலையில் வழிபடுவது இறைவனை ஆராதிக்கின்ற பாங்கு புறநிலையோடு அகநிலையும் இறைவனுக்காற்றும் பூசனையாகக் கண்டுவுவக்கலாம். யோகமான்து ஐம்புலன்களை ஒடுக்கி ஆறு ஆதாரங்களில் பொருந்தி பரிபூரணமாம் முதல்வனை சிந்தையில் தியானித்து, வினை ஒடுங்க இருக்கக் காணலாம்.இங்கு மனதால் சிந்தித்து, சிந்தனை வழி தியானித்து, இறைவனைத் தரிசிக்கும் பக்குவமமைகின்றது. மறுவார்த்தையில் கூறின் இறைவனை உருவங் கடந்த ஆதீதனாய், அருவ நிலையில் வழிபடும் தன்மைக்குரியதாய் யோகம் அமைகின்றது.

யோகிகள் உடல் இச்சைகளைக் கடைந்து உள்ளத்தை ஒருமுகப்படுத்தி இறை யுண்மையை உணர்ந்து இறைவனை அண்மிக்கும் தன்மைக்குரியர்களாவர்.'பதி, பசு, பாசந் தெரித்துப் பரசிவனைக் காட்டும் நன்மார்க்கமாக ஞானம் அமைந்துள்ளது. இதனையே சித்தியார் புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழின் மாத்திரை மலத்தின் செல்வாக்கினை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதன் ஆரம்ப நிலையாகின்றது.கிரியையானது அகப்புற நிலையோடு இணைந்தமைகின்றது. இங்கு அருவுருவ நிலையில் சிவனை வழிபடுதல் அமைவுறுகின்றது. காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக யானே முத்திறமேனிக்கும் அப்பாலாய் விளங்கும் அகண்டாகார சச்சிதானந்த சொரூபியை வழிபடுவது ஞானமெனச் சுட்டி நிற்கின்றது.

இதனை வலியுறுத்துவதே இறைவனடி ஞானமே ஞானமென வலியுறுத்துவர். நற்பொருளைக் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனும் நான்கும் ஞானத்தில் உள்ளடங்கும். 'ஞானத்தால் வீடென்றே என்றும் 'வீட்டை அடைந்திடுவர். நிட்டை மேவினோர்கள்' என்றும் 'ஞானநெறியடைந்தவர் சிவனை' என்றும் 'ஞானப் பெருமையுடையோர்' சிவனைப் பெறுவர் காண் என்று குறிப்பிடும் அடிகள் முத்திப் பதத்திற்கும் ஞானத்திற்கும் இடையிலான இன்றியமையாத் தன்மையைப் புலப்படுத்துவனவாக அமைகின்றது.



சைவ சித்தாந்தமானது நான்கு மார்க்கங்களை முத்திக்குரிய வழிகளாக எடுத்தாண்ட போதிலும் ஞானத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்துள்ளமை காணலாம்.

ஆனால் சங்கர வேதாந்தமானது ஞான மார்க்கத்திற்கே முதன்மையளிப்பதுடன். இதர கர்மம், பக்தி யோக மார்க்கங்கள் ஒரு எல்லைவரையே செல்லவல்லதென்பதை வலியுறுத்தி நிற்கும்.

(தொடரும்)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
27.12.1923

மறைவு
16.08.2010

## மதிப்புக்குரிய பிரபல தொழிலதிபர்
## S.V. முருகேசு

வியாபாரம் என்றால் என்ன? பிறரை மதிப்பது என்றால் என்ன? பக்தி என்றால் என்ன? சமுதாயத்தில் எப்படி வாழவேண்டும் என்று எல்லாம் எங்களுக்கு கற்பித்த ஐயா உங்கள் மறைவால் நாங்கள் துயரடைகிறோம் . . . . . .

S.V.MURUGESU நிறுவன ஊழியர்கள்
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-886)

# ஆவணி மாத இராசி பலன்கள்



## துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்.

**வாக்கு சாதுரியத்தால் வாதம் செய்வதில் வெற்றி பெறும் துலாம் இராசி நேயர்களே!**

பிறர் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டுவதால் தான் பெரும் பகை உங்களுக்கு ஏற்படுகிறது. எதையும் இரகசியமாக வைத்துக்கொள்வீர்கள். சிந்தனை ஆற்றல் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். எனவே, சிறுவயதிலேயே பெரிய மனிதர்களைப் போல பேசத்தொடங்குவீர்கள். இனிப்புச் சுவை உங்களுக்கு இயல்பாகவே பிடிக்கும். குடும்பத்தில் சண்டையை அதிகம் சந்திப்பவர்கள் நீங்கள்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்தில் இராசிநாதன் சுக்ரன் வலிமையிழந்து, செவ்வாய், சனியுடன் கூடுவதால் நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்ய இயலாது. அலைச்சல் அதிகரிக்கும். புத்திர ஸ்தானாதிபதியாக சனி விளங்குவதாலும், பிள்ளைகள் வழியில் பெரும் விரயங்களும் மனக்கசப்பு தரும் சம்பவங்களும் ஏற்படலாம். பொறுமையை மிக அதிகமாக கடைப்பிடித்தால்தான் இம்மாதம் இனிமையை காணமுடியும். எதிரிகளையும் வெல்ல முடியும். சனீஸ்வர வழிபாடு, சங்கடங்களைக் குறைக்க வழிகாட்டும்.

இம்மாதம் 22ஆம் திகதி முதல் கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தொழில், உத்தியோகத்தில் உடனிருப்பவர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை உருவாகலாம். தந்தை வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். பொருளாதார நிலை சீராக இருந்தாலும், வாழ்க்கைத் துணை வழியே திடீர் விரயங்களும் உருவாகலாம். எனவே, வழிபாடுகளை தெசாபுத்திக் கேற்ப வைத்துக் கொண்டால், வளர்ச்சியில் பெரும்பாலும் பாதிப்புகள் ஏற்படாது. பயணங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

இம்மாதம் 31ஆம் திகதி இராசிநாதன் சுக்ரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மைதான் என்றாலும், அஷ்ட மாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால், பெண் வழி பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். வரவு திருப்தி தரும். கொடுக்கல்கள் வாங்கல்கள் சீராகும். இரவு - பகலாக பாடுபட்ட ஒரு காரியம் இழுபறி நிலையிலேயே இருக்கும். பொது வாழ்வில் பொறுப்புகள் திடீரென மாறலாம். மறுநாள் வரும் சிம்ம புதனின் சஞ்சாரத்தால் பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

ஒன்றரை மாதங்களுக்கு ஒரு முறை பெயர்ச்சி ஆகும் செவ்வாய், தற்சமயம் உங்கள் இராசியிலேயே எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். பகை கிரகத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு வந்த செவ்வாய் இனி பதவி வாய்ப்புகளையும் வழங்குவார். பாசமிக்க உடன்பிறப்புகளின் பகையையும் மாற்றுவார். விற்ற சொத்துக்களுக்கு இணையாக வேறு சொத்துக்கள் வாங்குவீர்கள். விருந்து, விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும். வக்ர குருவின் ஆதிக்கமும், உங்கள் வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

விரய ஸ்தானத்தில் செவ்வாய், சனி கூடியிருப்பதால், முருகப்பெருமானையும், சனீஸ்வரரையும் முறையாக வழிபட்டு வாருங்கள். முன்னேற்றங்கள் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

குடும்பச்சுமை கூடும் மாதமிது. குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அலைச்சல் அதிகரிக்குமே தவிர, ஆதாயம் கிடைக்காது. பிறருக்கு என்ன உதவி செய்தாலும், அவர்கள் நன்றி காட்டுவது அரிது. வேலைப்பளு கூடும். பயணங்கள் அதிகரிக்கும். வீதியில் செல்லும் பொழுது, விலங்கினங்களிடம் கவனமாக இருப்பது நல்லது. கணவன் - மனைவிக்குள் அனுசரிப்புத் தன்மை இருந்தால், அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.



## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம் அனுஷம், கேட்டை.)

**பிறர் என்ன சொன்னாலும், அதைப் பிரார்த்தனைகள் மூலம் வெற்றிபெற வைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

நீங்கள் கடின உழைப்பிற்கு சொந்தக்காரர். உங்கள் கால்பட்ட இடமெல்லாம் தழைக்கும். பழைய சடங்கு, சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். உங்கள் கருத்துக்களை கேட்பதற்கும், ஆமோதிப்பதற்கும் ஒரு கூட்டமே காத்திருக்கும். புகழ் மிக்கவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், பொருளாதார நிலை உயரும். வங்கிச் சேமிப்பும் அதிகரிக்கும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடி எடுத்து வைப்பீர்கள். தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதர்ல், தொழில் வளர்ச்சி ஆச்சரியப்படும் விதத்தில் அமையும். தொகை வரவு அதிகரிக்கும் இந்த நேரத்தில் கிளைத் தொழில்கள் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வீட்டுப் பற்றும், நாட்டுப்பற்றும் கொண்ட உங்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 8, 11க்கு அதிபதியான புதன் இம்மாதம் 22ஆம் திகதி கடக இராசியில் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதை 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பார்க்கிறார். "அஞ்சும், ஒன்பதும்" மிஞ்சும் பலன் தரும் என்பது ஜோதிட பழமொழி. எனவே, செல்வ நிலை உயரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். முன்னோர் சொத்துக்களில் முறையான பாகப்பிரிவினைகள் ஏற்பட்டு, வண்ணமுற கட்டிடம் கட்டி மகிழ்வீர்கள். வருங்கால நலன் கருதி வைப்பு நிதி சேர்ப்பீர்கள். வாகன யோகம் அதிகரிக்கும். தேக நலன் திருப்தி தரும். தித்திக்கும் விதத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

அயனசயன ஸ்தானம் என்றழைக்கப்படும் பன்னிரெண்டாமிடத்தில் இம்மாதம் 31ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மை தான். அத்தோடு எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாயும் சஞ்சரிக்கப் போகிறார். 6, 12க்கு அதிபதிகள் ஒன்று கூடும் இந்த நேரத்தில் விபரீத ராஜயோகம் செயற்படப்போகிறது.

எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். திறமைமிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து கேட்ட உதவிகளை கேட்ட மாத்திரத்தில் செய்து கொடுப்பர். வெற்றிக்குரிய சம்பவங்கள் வீட்டில் நடைபெறும்.

இடையில் எதிர்வரும் செப்டம்பர் முதல் நாள் சிம்மத்தில் புதனும் சேர்வதால், புதன் ஆதித்ய யோகம் செயல்பட்டு, புகழ், கீர்த்தி, செல்வாக்கு அனைத்தும் பெருக வைக்கும். புதிய ஒப்பந்தங்கள் ஏராளமாக வந்து சேரும். மாதத் தொடக்கமே உங்கள் இராசியில் பிறப்பதால் மறக்க முடியாத சம்பவங்கள் நிறைய நடைபெறும் மாதமாகவே இம்மாதத்தைக் கருதலாம்.

வக்ர குருவை பலப்படுத்த யோக பலம் பெற்ற நாளில் குருவழிபாட்டை மேற்கொள்வதோடு, சர்ப்ப சாந்திகளையும் செய்தால், சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம். இம் மாதம் எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி பெற ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்.**

ஸ்தானத்தில் இராகு இருப்பதால், பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதால், குழப்பங்கள் அகலும்.

**சிவல்புரி சிங்காரம்**

மாதத்தின் மையப் பகுதியில் மாமன் வழி ஒத்துழைப்போடு புது முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். கணவன் - மனைவிக்குள் கனிவு கூடும். பிள்ளைச் செல்வம் உருவாவதற்காக எடுத்த முயற்சி கைகூடும். இடம், பூமிகளை உங்கள் பெயரில் வாங்க முன் வருவீர்கள். தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சி தரும். குல தெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றம் தரும்.

(தொடரும்)

# புகலிடக்கோரிக்கையாளர்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களை வழங்க வேண்டும்

## கனடாவிடம் இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை கனடா பரிமாறிக்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் புலனாய்வுத்தகவல்களை பரிமாறிக் கொள்வது தொடர்பில் உத்தியோ கப் பற்றற்ற பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கனடாவிற்கான இலங்கைத் தூதுவர் சித்தராங்கனி வாகீஸ்வர தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இவ்வாறான தகவல்கள் பரி மாறிக் கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கனடாவில் புகலிடக்கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வது இலகுவான தென தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை அதிகாரிகளின் தகவல்களை முழுமையாக நம்ப முடியாது என கனடிய தமிழ் அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. எம்.வீ.சன். கப்பலின் மூலம் அண்மையில் வான்கூவார் கரையை அடைந்த 500 தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் குறித்த புகலிடக்கோரிக்கையாளர் களுக்கு உதவி வழங்கும் நோக்கில் சட்டத்தரணிகள் அவர்களை சந்தித்து வருவதாகவும் குறிப்பிடப் படுகிறது. (6)

# மதவாச்சி-மடு புகையிரதப்பாதை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்து

மதவாச்சி மடு பகுதி புகையிரதப் பாதை புனரமைப்பை 81.3 மில்லியன் டொலர் செலவில் இந்தியா மேற்கொள்ளவுள்ளது. 43 கி.மீ. நீளமான இந்தப் பாதையின் புனரமைப்புக்கான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக்கே காந்தாவும் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவும் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு பணிகளுக்காக இந்தியா 800 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாகவும் இது அதில் ஒரு பகுதி எனவும் இந்த வைபவத்தில் கலந்துகொண்ட இந்திய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கொழும்பு -மாத்தறை புகையிரதப் பாதையின் புனரமைப்புக்கும் இந்தியா 167.4 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (6-2)

# ஐ.தே.க. எம்.பிக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸாரிடம் விசாரணை நடத்த வேண்டும்

## ரணில் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் விசாரணை நடத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்றில் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அண்மையில் காலியில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் அஜித்குமார ஆகியோர் பொலிஸாரால் தாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது ஓர் பாராதூரமான விடயம் எனவும் இந்த விடயம் குறித்து பாராளுமன்றம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் கலாசாரத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறித்த அதிகாரிகளை பாராளுமன்றிற்கு அழைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ரணில் வலியுறுத்தியுள்ளார். (6)

# பிரதான மின்வயர் தீப்பற்றியதில் 10 ஆயிரம் வீடுகள் பாதிப்பு

(கொழும்பு)

காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கும் காத்தான்குடி உப-மின் விநியோக நிலையத்தின் பிரதான மின் வயர் தீப்பற்றியதில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி மற்றும் காங்கேயனோடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரமின்றி பாதிக்கப்பட்டுள்ளன.

இனந்தெரியாதோரின் நாசகார செயல் காரணமாக இந்த மின்வயர் தீப்பற்றியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. தீயணைப்பு படையினர் குறித்த தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போதிலும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதை சரி செய்யும் முயற்சியில் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக இலங்கை மின்சர சபையின் காத்தான்குடி மின் பொறியியலாளர் ஏ.எல். மாஹிர் தெரிவித்தார்.

சம்பவம் காரணமாக ரம்ழான் நோன்பின் இரவு நேர தொழுகைகளில் ஈடுபட்டு வரும் பள்ளிவாசல்கள் சிலவற்றிலும் தற்போது மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# வெற்றிப்பாதையில் பயணிக்க உள்ளூராட்சி தேர்தலை களமாக பயன்படுத்த வேண்டும்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டுவதன் மூலம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மீளவும் வெற்றிப்பாதைக்கு செல்வதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஓர்களமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் கட்சியின் எதிர்கால வெற்றிக்கு பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரம் மிகவும் அவசிய மானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வீடு வீடாக சென்று பிரசாரங்களை நடத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளதோடு கிராம, பிராந்திய,நகர, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கட்சியை வலுப்படுத்தினால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் சிக்கல் நிலைமை இருக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

(6-2)

# சென்னை நீதிமன்றத்தினால் இலங்கையர் அறுவருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனுதாபிகள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இலங்கையர்கள் அறுவரை குற்றவாளிகள் என அடையாளம் கண்ட, சென்னை, தாம்பரம் நீதிமன்றம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு வருட சிறைத் தண்டைனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த அறுவருக்கும் எதிரான வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளனர்.

தம்பியண்ணா, செஞ்ஜேம்ஸ், ஜெயக்குமார் ,புஷ்பதனராஜ் ,பூமிநாதன் மற்றும் ரவிக்குமார் ஆகிய அறுவருமே இவ்வாறு குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் தமிழ் நாட்டின் தென் பகுதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட படகு ஒன்றின் மூலம் இராமநாதபுரத்திலிருந்து இலங்கைக்கு பயணிக்க முயன்றார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# பொலிஸ் சேவையில் சட்டத்தரணிகளை இணைத்துக்கொள்வதற்குத்திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் சட்டத்தரணிகளை இணைத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாக சட்டத்தரணிகளை நியமிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் அதாவுட சென‌விரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைத் திட்டம் குறித்து பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவிடம் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைகளின் போது பொலிஸ் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் தொடர்பான பூரண அறிவுடையவர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதன் மூலம் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தக் கூடிய சாத்தியம் கிட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் இணைந்து ஜனாதிபதியை கொல்ல முயன்றதாக வழக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்காக முன்னாள் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சரின் அனுமதியை கோருவதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மிக்கா சிங்கப்புலியிடம் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினரின் புலனாய்வு சுருக்க அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விசாரணையை பொலிஸ் மா அதிபர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குற்றப் புலனாய்வு பிரிவினர் ஆரம்பித்தனர்.

சந்தேக நபர்களான சிவராஜா, சுபாகிருஷ்ணன், நடராஜசிங்கம் சபாஷ் அல்லது ஸ்ரீபன் அல்லது ஜானு, லின்ரன், சந்திரஷான், வரதராஜன் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டு குற்றஞ்சாட்டு குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

நடராஜாசிங்கம் சுபாஸ் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தியின் மருமகன் எனவும் அவரின் பிரத்தியேக உதவியாளராகவும் பணியாற்றியதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் நாடாளு மன்ற உறுப்பினரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை சந்தித்து அவருடன் சேர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய திட்டம் தீட்டினர் என குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது.

சந்தேக நபர்களுக்கு விடுதலைப் புலி உறுப்பினரான மலேசியாவைச் சேர்ந்த ராஜன் என்பவர் நிதி வழங்கினார் எனவும் இவர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு ஒரு மில்லியன் ரூபா அனுப்பியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கிரகரி வீதியில் ஓர் இடத்தையும் கிருலப்பனையில் ஓர் இடத்தையும் ஜனாதிபதி அடிக்கடி வரும் இடங்களாக சந்தேக நபர்களுக்கு காட்டியுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகிறது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய தாம் விசாரணைக்களை முடித்துக் கொண்டதாக புலனாய்வு பிரிவினர் தெரிவித்ததுடன் அறிக்கை சமர்பிப்பதற்கான ஒரு தினத்தை கோரினர். நீதவான் குற்றப்புலனாய்வு பிரிவினரின் விண்ணப்பத்தை அனுமதித்தார். (6-2)

# 19.08.2010



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- ✸ 1862 - மினசோட்டாவில் லகோட்டா பழங்குடியினர் நியூ ஊல்ம் குடியேற்றத்திட்டத்தைத் தாக்கி பல வெள்ளையர்களைக் கொன்றனர்.
- ✸ 1895 - கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.
- ✸ 1915 - முதலாம் உலகப் போர்: ஒட்டோமான் பேரரசுப் படைகளுக்கெதிராக ஆர்மீனியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர்.
- ✸ 1919 - ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் முழுமையான விடுதலை அடைந்தது.
- ✸ 1934 -ஜெர்மனியில் பியூரர் பதவியை ஏற்படுத்த நாட்டின் 89.9% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
- ✸ 1944 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நட்பு நாடுகளின் உதவியுடன் பாரிஸ் தாக்குதலைத் தொடுத்தது.
- ✸ 1945 - ஹோ ஷி மின் தலைமையில் வியெட் மின் படைகள் வியட்நாமின் ஹனோய் நகரைக் கைப்பற்றினர்.
- ✸ 1946 - கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- ✸ 1953 - பனிப்போர்: அமெரிக்காவின் சிஐஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக்கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷா முகமது ரேசா பாலாவி தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.
- ✸ 1960 -சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும், 40 சுண்டெலிகளையும், 2 எலிகளையும், பல வகைத்தாவரங்களையும் கொண்டு சென்றது.
- ✸ 1980 - சவுதி அரேபியாவில் பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்குகையில் தீப்பிடித்ததில் 301 பேர் கொல்லப்பட்டனர்.
- ✸ 1989 -போலந்தின் பிரதமராக சொலிடாறிற்றி தொழிற்சங்கவாதி டாடியூஸ் மசவியேஸ்கி அதிகர் ஜாருசெல்ஸ்கியினால் தெரிவு செய்யப்பட்டார். 42 ஆண்டுகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் முதல் கம்யூனிஸ்ட் அல்லாத பிரதமர் இவரே ஆவார்.
- ✸ 1991 -ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் சோவியத் அதிபர் மிகைல் கர்ப சோவ் கிறிமியா என்ற சுற்றுலா மையத்தில் ஓய்வெடுக்கும் போது கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- ✸ 2002 - ரஷ்யாவின் Mi - 26 ரக உலங்கு வானூர்தி செச்சினியத் தீவிரவாதிகளின் ஏவுகணையால் தாக்கப்பட்டதில் 118 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- ✸ 1871 - ஓர்வில் ரைட், எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1948)
- ✸ 1918 - சங்கர் தயாள் சர்மா, இந்தியாவின் 9வது ஜனாதிபதி(இ.1999)
- ✸ 1929 - ச.அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (இ. 2008)


## இறப்புகள்

- ✸ 1905 - வில்லியம் - அடோல்ஃப் பூகுவேரோ, பிரெஞ்சு ஓவியர் (பி. 1825)
- ✸ 1934 - ஃபெடரிக்கோ கார்சியா லோர்ககா, ஸ்பானிய எழுத்தாளர் (1898)
- ✸ 1962 - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1623)

## சிறப்பு நாள்

- ✸ ஆப்கானிஸ்தானின் - சுதந்திர தினம் (1919)

**1946 -ஐக்கிய அமெரிக்காவின் 42ஆவது ஜனாதிபதி பில் கிளின்டன் பிறந்தார்.**



# புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சிகள் விஸ்தரிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள வடக்குக் கிழக்கு இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சிகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்காலத்தில் 400 தொழிற் பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தர்மபுரம் புனர்வாழ்வு நிலையத்திலுள்ள 200 இளைஞர்களை இலக்காகக் கொண்டு கட்டட நிர்மாணப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியின் கீழ் மூன்று மாத காலத்திற்கு கட்டட நிர்மாணம் சார்ந்த நுட்பங்களைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சிநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் உடைய டிப்ளோமா சான்றிதழ்களையும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாதம் 23 ஆம் திகதி மேலும் ஒரு பாடநெறியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள வடக்குக் கிழக்கு இளைஞர்களின் நலன் கருதி அடுத்த மூன்று மாத காலத்திற்குள் 400 தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (6-2)

## வீதியால் நடந்து சென்ற யுவதியின் கைப்பை அபகரிப்பு

(நல்லூர்)

நாயன்மார்க்கட்டு குளத்தடிவீதியால் நடந்துசென்று கொண்டிருந்த யுவதியொருவரின் கைப்பையை அவ் வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக குறித்த யுவதியினால் கல்வியங்காடு இராணுவத்தினரிடம் முறையிடப்பட்டுள்ளது. (6-4-134)

## நெற்காணிகள் குறித்த மீளாய்வு

(தனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற்காணிவயல் நிலப்பரப்புகள் தொடர்பான மீளாய்வு நடைபெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எனவே இவ் அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் , சாவகச்சேரி வர்த்தக வங்கி முன்பாக உள்ள தலைவர் திருஞானசம்பந்தர் இல்லத்தில் காலை 9 மணிமுதல் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் க. குகானந்தா தெரிவித்துள்ளார். (6-4-37)

# வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்கில் 2 வருடங்களுக்கு தற்காலிக நீதிமன்றங்கள்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு தற்கால நீதிமன்றங்களை அமைத்து அதன்மூலம் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

குடியியல் நடவடிக்கைச் சட்டக் கோவை திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இந்த நாட்டுச் சட்டங்கள் யதார்த்த பூர்வமாக இருக்கவேண்டும். சமூக பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப சட்டம் அமைய வேண்டும்.

தற்பொழுது நீதிமன்றங்களில் 4 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் குவிந்துள்ளன. சொத்து வழக்குகள் முடிவடைய 30 தொடக்கம் 40 வருடங்கள் வரை பிடிக்கின்றன. வழக்கு தாமதமானால் நியாயம் கிடைக்காமல் போகும்.

எனவே, வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவது தொடர்பாக நீதிபதிகள் சட்டத்தரணிகள் மற்றும் கல்விமான்களுடன் தொடர்ந்து பேசி வருகிறேன்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக சட்டத்தரணிகளையும் பட்டதாரிகளையும் நியமிப்பது குறித்து பொலிஸ்மா அதிபருடன் ஆராய்ந்து வருகிறேன். இதனூடாக உரிய நேரத்துக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்கு பங்களிக்க முடியும்.

நீதிமன்றங்களினதும் நீதிபதிகளினதும் தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்கால நீதிமன்றங்களை 2 வருடங்களுக்கு நியமித்து வழக்குகளை துரிதப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் தற்காலிக நீதிமன்றங்களை அமைத்து அவற்றுக்கு ஓய்வூதியம் பெற்ற நீதிபதிகளையோ திறமையான சட்டத்தரணிகளையோ நியமிக்க உள்ளோம் என்றார். (6-2)

# ஆங்கிலமொழி மூல ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

ஆங்கில மொழிமூல ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது.

அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரத்து 200 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன குறிப்பிட்டார்.

உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவுப் பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக இந்தப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.


நேற்று ஆரம்பமான இந்நேர்முகப் பரீட்சை தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைகளின் மூலம் 554 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

உயர்தரவகுப்புகளில் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்படும் ஆசிரியர்களை அடுத்த தவணை முதல் சேவையில் அமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கல்வியமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன மேலும் தெரிவித்தார். (6-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 5ஆம் திருவிழா



படங்கள் –அரவிந்

## கடைக்கண் பாராயோ

நல்லைப்பதி நாயகனே நம் முருகா -உனை
நாடியே வந்திட்டோம் நலம் யாவும் நல்கிடுவாய்
தொல்லைகள் தொலைந்திடவும் துயர் யாவும்
கலைந்திடவும் கூடி நின்று துதிக்கின்றோம் - துன்பம்
எல்லையைக் கடக்குதையா ஏக்கமாய் இருக்குதையா
எங்களுக்காய் இரங்காயோ
கல்லைக்கனிய வைக்கும் கானம் இசைத்து வந்தோம்
கந்தனே வாராயோ கடைக்கண் பாராயோ

எஸ்.கே.மனோகரன் , சுன்னாகம்

## நம்பினோர் குறை தீர்ப்பவனே

நல்லைக் கந்தனே
எம்மை
என்றும் காப்பவனே
நம்பினோர்
குறை தீர்ப்பவனே
துயரங்கள் தூரவோடும்
எம் வாழ்க்கை
வசந்தமாகும்
உனை ஒருமுறை
நினைத்தாலே

சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை

## எம்துயர் கண்டு இரங்குவாய் முருகா

ஏன் இந்த கோபம் எம்மீது உனக்கு -நல்லைக்குமரா
என்ன பிழை செய்தோம் ஐயா!
வான் அதிர கதறி அழுது உனை தொழுதேத்தினோம்
வாழாதிருந்ததேனோ பதில்கூறுமையா!
கண்முன்னே எம் சகோதரர்கள் வீழ்ந்து
மடிதல்கண்டும்
புண்பட்ட உன் மனம் மௌனமாய் இருந்ததேனோ
இன்னும் உன்னை நாம் மறக்கவில்லை -கந்தா
இரங்குமையா எம்துயர்கண்டு மனம் இரங்குமையா!

உதிஷ்டிரன், நல்லூர்

## ஏற்றமே அளிப்பார் திண்ணம்

நல்லையில் அமர்ந்திருந்து நலம்பல நல்கும் எங்கள்
தொல்வினை அகற்றும் நாதன் தூய வேற் கரத்து வள்ளல்
எல்லையில் தேவ சேனை இடர்தனை மாய்த் தவாறு
அல்லலுற்றுளலும் எம்மை ஆதரித்தாழுமையா

தொல்லைகள் வந்தபோதும், சோதனை மலிந்தபோதும்
எல்லையில் இடர்களெல்லாம் எம்மைவந் திணைந்தபோதும்
நல்லருள் நல்கும் எங்கள் நீழ்வடிவேற் பெருமான்
ஒல்லையில் வருகை தந்து ஏற்றமே அளிப்பார் திண்ணம்

கவிஞர் சி.பூ.பொன்னம்பலம், முள்ளியவளை

நல்லூர் முருகப் பெருமானின் அருட்கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறோம்

ஈஸ்வரன் ரேடர்ஸ்



இல.115, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

1960 களின் ஆரம்ப காலப் பகுதியில் பல்கலைக்கழக மட்டத்திலும் குறிப்பாக கலைத்துறைப் பாடநெறிகளைத் தாய்மொழியிற் பயிலுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தொடர்ந்து வந்த காலப் பகுதிகளிலே விஞ்ஞானக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றையும் தேசிய மொழிகளிலே பயிலக் கூடியவாறு மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே தாய் மொழிகளிலே கல்வியை வழங்கும் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாகச் சமூகபொருளாதார நிலைமைகளில் பின் தங்கிய பிள்ளைகளும் கல்வியைத் தொடர்வதற்கு வசதி வாய்ப்புகள் உருவாகின.

இந்தியாவிலே காந்தியடிகளின் கல்வித் திட்டத்திற் கிராமங்கள் சிறப்பிடம் பெற்றமையைக் காணலாம். உண்மை இந்தியாவைக் கிராமங்களிலேயே காணமுடியும் என்றார் அம்மகான். இந்தியாவிலுள்ள கிராமங்கள் வளர்ச்சியடைந்தால் இந்தியா வளர்ச்சியடைந்ததாக அமையும். அது தேசிய வளர்ச்சியாக விளங்கும். எனவே கிராமியக் கல்வி வளர்ச்சிக்கு காந்தியடிகளின் கல்விக் கொள்கையில் முன்னுரிமையளிக்கப்பட்டது. அதன் பிரதிபலிப்பே இலங்கையிலும் கிராமங்களில் பாடசாலைகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நாட்டின் கல்வி வளர்ச்சி சிறப்பாக அமையும் என்ற கருத்துக் காணப்பட்டது. அந்தப் பின்னணியிலே கிராமப் புறங்களில் ஆணைக்குழுவினர் கிராமியக் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டினர். அதன்படி கிராமப்புறப் பிரதேசங்களில் மக்கள் சேர்ந்து தங்களது முயற்சியால் பாடசாலையையும் அமைத்து தேவையான உபகரணங்களையும் வழங்கினால் அரசு ஆசிரியர்களை நியமிக்கும் அல்லது சேவையில் ஈடுபடுத்திய ஆசிரியருக்கு வேதனத்தை வழங்கும். பாடசாலையை நிர்வகிக்கும் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ளும் "நிர்வாகிக்கும் பாடசாலை முறை" என அழைக்கப்பட்ட இம்முறை பின் தங்கிய பிரதேசங்களில் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. பாடசாலைக்கட்டிடங்கள், உபகரண வசதிகள் ஆகியவற்றின் உச்சப் பயன்பாட்டினைப் பெறுவதற்காக இரு நேரப் பாடசாலைகளாக இயங்கத் தொடங்கியது. கல்வி நன்கொடை வழங்கும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் தொகை குறைக்கப்பட்டது. அத்துடன் மட்டுமல்லாது பாடசாலைப் புத்தகங்களை மாற்றுதல் தடை செய்யப்பட்டது. 1931 ஆம் ஆண்டில் ஹந்தஸ்ஸ கிராமத்தில் வாழ்கையோடு இணைந்த செயலாகக் கல்வியினைச் செயற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு கிராமியக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டது. சுகாதாரம், பிரதே சத்தைப் பற்றிய அறிவு, தொழிற் கல்வி, இலக்கியமும் சங்கீதமும் என்னும் நான்கு பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பாடசாலைக் காலம் இரண்டரை மணித்தியாலங்களைக் கொண்ட இரு பாடவேளைகளாக அமைந் திருந்தது. காலையிலுள்ள இரண்டரைமணித்தியாலங்கள் செய்முறை திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும், மாலையிலுள்ள இரண்டரை மணித்தியாலயங்கள் காலை யில் பெற்ற திறன்கள் தொடர்பான கோட்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. மேலும் இக்கிராமியக் கல்வி முறை ஆறாம் வகுப்பு தொடக்கம் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1939 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 253 ஆண்கள் பாடசாலைகளும், 43 பெண்கள் பாடசாலைகளும் நாட்டில் காணப்பட்டன எனலாம்.

இலங்கையின் பாடசாலை அமைப்பு முறை வரலாற்றில் மத்திய பாடசாலைகளின் தோற்றம் முக்கிய இடத்தை பெறுகின்றது. அரசாங்கம் மத்திய பாடசாலைகளை 1944 ஆம் ஆண்டில் ஆரம்பித்தமை கல்விக் கொள்கையில் ஏற்பட்ட பெருமாற்றமாகும். இப்பாடசாலைகள் கிராமப் பிள்ளைகளுக்கு இலவசமாக கல்வி நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்கு அச்சாணியாக விளங்கின என்றால் மிகையாகாது. கிராமப் புறங்களிலே மத்திய பாடசாலைகளை நிறுவதன் மூலம் நாடாளவிய முறையில் சிறந்த கல்விமான்களை உருவாக்கலாம் என்ற கருத்தில் இத்திட்டம் வகுக்கப்பட்டது. சமூக வகுப்புகளின் அடிப்படையில் கல்வியில் பின்தங்கியவர்களுக்கு கல்வியில் சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் வழியாக கல்வியை ஜனநாயகப் படுத்துவது பற்றிய நோக்கும் மத்திய பாடசாலைகளுடன் இணைந்த வகையில் விரிவு படுத்தப்பட்டது. மத்திய பாடசாலைகள் உள்ளூர் சூழலுக்கு ஏற்ப மாணவர்க்கு கல்வியூட்ட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டே ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த பின் இடைநிலைக் கல்விக்கு அல்லது பின்னாரம்பக் கல்விக்கு நகரங்களை நோக்கிச் செல்ல விரும்புவோருக்கு அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே சந்தர்ப்பத்ததை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மத்திய பாடசாலைகள் அமைக்கப்படுவது இன்றியமையாத அவசியமாக விளங்கியது. அத்துடன் மத்திய பாடசாலைகள் நூற்கல் விக்கும், செயன்முறைக்கல்விக்கும் முக்கிய இடத்தை அளித்தன. இதற்கேற்ற வகையில், கிராமப் புறங்களில் வாழும் இளைஞர்களும் யுவதிகளும் தமது பிரதேசங்களிலேயே தத்தமது திறன்களுக்கும், ஆற்றல்களுக்கும் ஏற்ற துறையில் உயர்கல்வியினை பெற்றுக் கொள்வதற்கும் வசதியாகவே இப்பாடசாலைகள் அமைக்கப்பட்டன. நீண்ட கால நோக்கில் இவ்வித்தியாலங்கள் கிராமப் புறத்திலுள்ள திறமைசாலி மாணவர்களுக்கு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பை அளித்தன. ஆகவே அரசின் இத்திட்டமானது பிற்காலத்தில் சமுதாயத்தில் சமத்துவத்தை தோற்றுவிப்பதற்கும் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனலாம்.

ஆங்கிலமொழியிலே உயர்நிலைக்கல்வி பயிலுவதற்கு கட்டணம் செலுத்த வேண்டியிருந்த காலத்தில், இலவசமான புலமைப் பரிசில் முறையொன்றை ஏற்படுத்துவதன் அவசியம் இக்காலப் பகுதியில் உணரப்பட்டது. பொருளாதாரச் சிறப்பு பெறு வதற்கு திறவுகோலாயிருந்த ஆங்கில மொழிக் கல்வி, டொனமூர் அரசமைப்புக்கு பிற்பட்ட காலத்திலும் மக்களிடையே பெருமதிப்பு பெறுவதாயிற்று. அதனால் சிங்களப் பாடசாலைகளிலும், தமிழ் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களிடையே முன்னுக்கு வரக்கூடியோர் இலவச புலமைப் பரிசில்களின் உதவியோடு தமது படிப்பை உயர்த்த, பாடசாலைகளிலே தொடருவதற்கு ஏதுவாக அவ்வப்போது சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1920 ஆம் ஆண்டில் போட்டிப்பரீட்சைகளின் முடிவுகளின் வழி இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பரிசில்கள் தவிர அரசாங்கப்பாடசாலைகளும் மற்றும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும், பரோபகாரிகளால் அல்லது தாபனங்களால் நல்கப்பட்ட நிதியுதவி கொண்டு, தனிப்பட்ட முறையிலே புலமைப் பரிசில்களை வழங்கின. எனினும் இத்தீர்வு முழுவதையும் உள்ளடக்கிய விரிவான புலமைப்பரிசில் திட்டமொன்று கல்வித் திணைக்களத்தால் 1939 ஆம் ஆண்டிலே தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி ஆண்டொன்றுக்கு 200 ரூபா பெறுமதியுடையனவும், உயர்தர ஆங்கிலப் பாடசாலையொன்றில் ஆறாண்டு கால நீடிப்பு உடையனவுமான அறுபத்து நான்கு புலமைப் பரிசில்கள் போட்டிப்பரீட்சையின் முடிவுகளின் படி அழிக்கப்பட்டன. தீவு முழுவதையும் உள்ளடக்கும் வகையிலே, அரசாங்க சபை தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புலமைப் பரிசிலும், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு புலமைப் பரிசிலுமாக அவை வழங்கப்பட்டன. ஆயினும் மேற்கு மாகாணத்திற்கு மாத்திரம் இரண்டு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப் புலமைப்பரிசில் திட்டமானது மாணவர்களுக்கு ஊக்கு விக்கும் திட்டமாக அமைந்தது. இவ்வாறாக அரசாங்க சபைத் தேர்தல் தொகுதிகளிலும் வழங்கப்பட்ட புலமைப் பரிசில் திட்டமானது கல்விக்கொள்கைகளில் அரசியல் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

(தொடரும்)

5

## சட்டவிரோத குடியேறிகளின் படகுகளை தடுக்க பாரியளவிலான நடவடிக்கை

### கடற்படையினர் மும்முரம்

இலங்கையிலிருந்து சட்டவிரோத குடியேறிகளை ஏற்றிச் சென்றுள்ள சில படகுகளை தடுத்து நிறுத்துவதற்கு கடற்படை பாரியளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியா நோக்கில் சில சட்டவிரோத குடியேறிகள் படகுகளின் மூலம் பயணத்தை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் கிட்டியுள்ளதென கடற்படை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கு, வடமேற்கு மற்றும் வடக்கு போன்ற கடற்பிரதேசங்களிலிருந்து குறித்த படகுகள் பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் செல்லும் படகுகளை பிடிப்பதற்காக கடற்படையின் கப்பல்களும் நவீன படகுகளும் பயன்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் தமிழர்களும் படகுகளில் பயணிப்பதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிட்டியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு ஒன்றை கடற்படையினர் இரண்டு தினங்களுக்கு முன்னர் கைது செய்துள்ளனர் எனவும் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (6-2)

## வடபகுதி மாணவர்களை இலவச சுற்றுலா அழைத்துச்செல்லும் திட்டம்

### வடமாகாண சபை ஏற்பாடு

(கொழும்பு)

வடபகுதி மாணவர்களை இலவச சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் ஒன்றை வட மாகாண சபை ஆரம்பித்துள்ளதுடன் அதற்கு 16 இலட்சம் நிதியையும் ஒதுக்கியுள்ளது. இலவச சுற்றுலா திட்டத்தின் கீழ் சுமார் எட்டு நாட்களுக்குகுறிப்பிட்ட மாணவர்கள் வெளிமாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 500 பேர் இவ்வாறு அழைத்துச் செல்ல தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். முதல் கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 250 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் இன்று தமது முதலாவது சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

தரம் 8 முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களே இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சுற்றுலாவின் போது மாணவர்கள் பாராளுமன்றம் நூதன சாலை, உயர் கல்லூரிகள், அநுராதபுரம், காலி, மாத்தறை, கதிர்காமம், கண்டி, நுவரெலியா, மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (6-2)

## வீடமைப்பு திட்டங்களுக்கான காணிகளின் விபரம் திரட்டல்

### வீடமைப்பு அதிகார சபை

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சகல காணிகளினதும் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையை அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்சவின் ஆலோசனைக்கமைய வடக்கு , கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக இத்திட்டம் மேற்கொள்ளப் படுகிறது.

இதன் போது, காணிகளின் பட்டியலொன் றை மிகவும் குறுகிய காலத்திற்குள் சரியான முறையில் தயாரித்துக்கொள்ள காணி நடவடிக்கைக் குழு ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

காணிகளின் சகல விபரங்களையும் திரட்டும் நடவடிக்கைகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. கொழும்பு, களுத்துறை , இரத்தினபுரி , கம்பஹா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் சம்பந்தமாக விடேச கவனம் மேற்கொள்ளப்படுவதுடன் அம்மாவட்டங்களின் குறைந்தது 500 ஏக்கர் அளவு காணி விபரங்கள் திரட்டப்பட்டு அவற்றில் வீடு இல்லாத குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டம் வகுக்கப்படவுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (6-2)

# அழிந்து விட்டதாக கருதப்பட்ட அரியவகை 'தேவாங்கு' கண்டுபிடிப்பு

பூமியில் இருந்து அழிந்து விட்டதாக விலங்கியல் ஆராய்ச்சியாளர்களால் கருதப்பட்ட ஒரு தேவாங்கு இனம் 60 ஆண்டுகளுக்கு பின் இலங்கையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விலங்கியல் குறித்த ஒரு ஆராய்ச்சியின் போது இந்த தேவாங்கு இனம் ஆராய்ச்சியாளர்களின் கண்களில் சிக்கியுள்ளது. உலகம் தோன்றிய போது இருந்த பல விலங்கினங்கள் தற்போது இல்லை.

கடந்த காலங்களில் இயற்கையின் சீற்றத்தாலும் எரிகற்கள் மோதியதாலும் பல அரிய விலங்குகள் பூமியில் இருந்து பூண்டோடு அழிந்து விட்டன. டைனோசர்கள் கூட இவ்வாறு தான் அழிந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்த வகையில் சின்னஞ்சிறு தேவாங்கு இனம் ஒன்று அழிந்து போய்விட்டதாகவே கருதப்பட்டது.

லண்டன், விலங்கியல் அமைப்பு, கொழும்பு பல்கலை, ஸ்ரீலங்கா திறந்தவெளி பல்கலை ஆகியவை இணைந்து இலங்கை வனங்களில் உள்ள விலங்குகள் குறித்த ஆய்வை சமீபத்தில் மேற்கொண்டன.

இந்த ஆய்வின் போது தான் அழிந்து விட்டதாக கருதப்பட்ட தேவாங்கு இனம் கிடைத்து உள்ளது. இது குறித்து இலங்கையை சேர்ந்த விலங்குகள் குறித்த ஆராய்ச்சியாளர் சமன் கமகே கூறியதாவது, 20 சென்ரிமீற்றர் உயரமும் பளிங்கு போன்ற கண்களும் கொண்ட பாலூட்டி இனத்தை சேர்ந்த இந்தத் தேவாங்கு இனம் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது. அதன் பின் அவை மறைந்து போய் விட்டன. 19ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் பிடியில் இலங்கை இருந்த போது கோப்பி, தேயிலை தோட்டங்களை அமைப்பதற்காக காடுகள் அதிகமான அளவில் அழிக்கப்பட்டன.

அப்போது இங்கு வாழ்ந்த அரிய வகை தேவாங்கு இனம் உணவுக்காகவும் எதிரிகளிடம் இருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்காகவும் இடம் பெயர்ந்தன. கடந்த 1937ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை இந்த விலங்கினத்தை யாரும் பார்க்க



வில்லை. இதனால் இந்த இனம் அழிந்து போயிருக்கலாம் என்று கருதப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2002ஆம் ஆண்டு ஒரு சிலர் இந்த இனத்தை பார்த்த தாக கூறினர். இதைத்தொடர்ந்து இந்த அரிய விலங்கினம் குறித்த தேடுதல் ஆரம்பமானது எவ்வளவோ முயன்றும் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை இந்த விலங்கினம் குறித்த எவ்வித தடயமும் கிடைக்கவில்லை இந்நிலையில் சமீபத்தில் இந்த விலங்கினம் ஆராய்ச்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு சமன் கமகே தெரிவித்தார்.

இந்த விலங்கின ஆய்வில் முக்கிய பங்கு வகித்த லண்டன் விலங்கியல் அமைப்பின், விலங்கியல் ஆராய்ச்சியாளர் டர்னர் கூறுகையில், இந்த தேவாங்கு இனத்தின் விசேடமே அதன் மிளிரும் சிவப்பு நிற கண்கள் தான் இதை கொண்டே நாங்கள் இந்த விலங்கை அடையாளம் கண்டோம் . தற்போது ஆய்விற்காக இந்த அரிய வகை தேவாங்கு எங்களிடம் உள்ளது. அதன் எடை உயரம் உள்ளிட்ட அளவுகள் எடுக்கப்படும். மரபணுக்கள் குறித்த சோதனை மேற்கொள்ளப்படும்.

அதன் பின் தேவாங்கு காட்டில் விடப்படும் எங்களை பொறுத்த வரையில் இது மிகவும் அதிசயமான ஒரு விலங்கினம் அழிந்து போயிருக்கலாம் என்று பல ஆண்டுகளாக கருதப்பட்டு வந்த இந்த தேவாங்கு இனம் தற்போது காணப்பட்டுள்ளதால் இலங்கை காடுகளில் இவ்வகை விலங்கினம் இருக்க அதிக வாய்ப்பு உண்டு என்றார். (6-2)

## அதிபர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய புதிய அதிபர்களுக்கான 2ஆம் கட்ட செயலமர்வு எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30மணி முதல் 3.30 மணிவரை புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு குறித்த அதிபர்கள் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-19)

## தேசிய ஔடதக்குழு நியமிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

மருந்துகளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல், முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றை கவனிப்பதற்கு என தேசிய ஔடதக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துக்கொள்கை அமுலாக்கத்திற்கு சிபாரிசுகளை வழங்கும் பொறுப்பு இந்தக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ரவீந்திர குபேரோ நியமிக்கப்பட்டுள்ளார். (6

## டெங்கு ஒழிப்பு பணிகள் தீவிரமாக முன்னெடுப்பு

மாதகல் பிரதேசத்தில் மக்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் டெங்கு நோய் அச்சுறுத்தல் காரணமாக இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு கிராம மட்டத்தில் இருந்து இந்நடவடிக்கையில் ஈடுபடுமாறு அரசு வலியுறுத்தியதற்கு அமைவாக, மாதகல் கிராமசேவையாளர், சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் டெங்கு தடுப்பு குழுவினர் ஆகியோர் இணைந்து ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அத்துடன் உலக உணவுத் திட்ட வேலைக்குழுவினரும், சிரமதானப்பணிகளில் இவர்களுடன் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுகின்றனர்.

முன்னரும் இப்பிரதேசத்தில் இதுபோன்ற நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (6-2)


# கோலாகல திறப்புவிழா
# கதிர் வேளாண்

HAYLEYS AGRO

கடந்த முப்பது வருடங்களிற்கு மேல் வன்னி விவசாயிகளின் நன்மதிப்பை வென்ற கேலிஸ் அக்குரோ நிறுவனத்தினர் தமது உற்பத்திப் பொருட்களை ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக் கொள்ள தமது அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்களாக A9, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் கதிர்வேளாண் வாணிபத்தினரை நியமித்துள்ளனர் என்பதனை விவசாயிகளுக்கு பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இன்று 19.08.2010 வியாழக்கிழமை காலை 10.30 தொடக்கம் 11.30 வரையுள்ள சுபநேரத்தில் கோலா கலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

- விவசாய இரசாயனங்கள்
- உரவகைகள்
- விசேட உரவகைகள்
- விதைப் பொருட்கள்
- கால் நடை மருந்துகள்
- அறுவடை இயந்திரங்கள்
- தெளி கருவிகள்
- (இவற்றுடன்)பயிர்ச்செய்கை, கால்நடைவளர்ப்பு சம்பந்தமான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

கதிர் வேளாண்,
A9வீதி, கரடிப்போக்கு (சம்பத் வங்கி அருகில்),
கிளிநொச்சி.

(சி -892)

# இன்று பதக்கம் எடுக்கப்படும் நாளை உயிர்.....

கடந்த 1995ஆம்ஆண்டு... விடுதலைப்புலிகளின் கையில் இருந்த யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் விழ்த்திய நேரம்... 600க்கும் மேற்பட்ட அப்பாவி பொது மக்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லி சுற்றிவளைக்கிறார் யாழ்ப்பாணத் தின் கட்டளை அதிகாரியாக இருந்த அந்தப்புள்ளி. காயங்களோ டும் பசியோடும் கதறிய மக்களை கொஞ்சம் கூட சட்டை செய்யாமல், "புதை குழிதோண்டி இவர்களை உயிரோடு உள்ளே தள்ளுங்கள்!" என உத்தரவிட்டார் அந்த அதிகாரி. சிங்கள இராணு வத்தின் வீரர்களே அதைச் செய்ய தயங்க... தன் தலைமையில் அந்த வீரர்களை முடுக்கிவிட்டு அந்த கொடூரத்தை அரங்கேற்றினார்.

கொடூர இனக்கொலையாக உலகையே உலுக்கிய இந்த விவகாரம்,இலங்கையிலும் பெரி தாக வெடித்தது. இலங்கை உயர் நீதிமன்றத்தில் அந்த அதிகாரிக்கு எதிராக வழக்கும் பதிவானது. தான் செய்த கொடூரத்தை ஒப்புக் கொள்ளவோ,மறுக்கவோ செய்யாத அந்த அதிகாரி, "எங்கள் நாட்டில் நீதிமன்றத்திலும் விசாரிக்கப்பட்டன. இதில் முதலாவது நீதிமன்றம், கடந்த 13ஆம் திகதி பொன்சேகாவை குற்றவாளியாக அறிவித்து தீர்ப்பு வழங்கியிருக் கிறது. இதன்படி,கடந்த 40 வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றியதற்காக பெற்றிருந்த அத்தனை கௌரவமான பரிசுகள், பதக்கங்களை பொன்சேகாவிட மிருந்து பறிக்கப்போகிறது சிங்கள அரசு. இதில் ரொம்பவே பதறிப் போய் இருக்கும் பொன்சேகா, உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யத் தீவிரமாகி வருகிறார்.

இது குறித்துப் பேசும் ஜே.வி.பி.பிரதிநிதிகள் சிலர், "இராணுவநீதிமன்றத்தின் விசாரணை நடந்த போது, சிவில் நீதிமன்றங் களில் விடுமுறைக்காலம். அதனால், வேறு ஒரு நாளில் விசாரணை நடத்தும்படி பொன்சேகா தரப்பினர் போராடினார்கள். ஆனால், அதற்கு வழியில்லாமல் போய்விட்டது. அப்போதே பொன்சேகாவிற்கு எதிரான தீர்ப்புத்தான் வரும் என்று தெரிந்துவிட்டது. கடந்த 9ஆம்திகதி தொடங்கி 12ஆம் திகதி வரை நடந்த விசாரணையில் அவரது திருக்கும் புள்ளிகளோ, "எத்தகைய சட்டப்போராட்டத்தை நடத்தினா லும் சிங்கள அரசின் பிடியிலிருந்து பொன்சேகாவால் தப்ப முடியாது. இரண்டாவது இராணுவ நீதி



மன்றத்தில் அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஏராளமான ஆதாரங்களை வழங்கியிருக்கிறது

தான் சீனாவில் தங்கி இருந்தற்கான ஆதாரங்களை பொன்சேகா திரட்டினார்.

ஆனால், இராணுவத்தில் அவருக்குக் கீழ் பணியாற்றிய அதிகாரிகளையே அவருக்கு எதிரான சாட்சிகளாக நிறுத்தப் போகிறது அரசுத் தரப்பு. இராணுவ இரகசியங்களை வெளியிட்டது, ஆயுதம் மற்றும் இராணுவ உபகர ணங்கள் வாங்கியதில் கோடிக்கணக் கில் மோசடி செய்தது, புலிகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களை சர்வதேச ஆயுதக் குழுக்களிடம் விற்க முயன்றது என வெளியில் வராத பல குற்றச்சாட்டுகளை இரண்டாவது நீதிமன்றத்தில் அரசுத் தரப்பு சமர்ப்பிக்கப்போகிறது.அந்த வழக்குகளில் பொன்சேகாவுக்கு மரண தண்டனை கிடைத்தாலும் ஆச்சரியம் இல்லை!" என்கிறார்கள்.

## தமிழ் இளைஞர்களைப் புதைத்த சரத் பொன்சேகாவை பார்

பெற்றோல் வளம் குறைவு.இன்னும் 50 வருடங்களில் செம்மணி மண் ணில் நிறைய பெற்றோல் கிடைக்கும்!" என இது பற்றிச் சொல்லி அதிர அதிரச் சிரித்தார்.

ஹிட்லரையே மிஞ்சும் அள வுக்கு நர்த்தனமாடிய அந்த அதி காரி வேறு யாரும் அல்ல.... பதவி,அந்தஸ்து,பதக்கங்கள், ஓய்வூதியம் போன்றவை பறிக் கப்பட்டு, தற்போது மரணத்தின் நிழல் நெருங்கிவிட்டதாகப் பதறிக்கிடக்கும் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா!

இலங்கையின் இராணுவத் தளபதியாகவும் அதனைத் தொடர்ந்து கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாகவும் பதவி வகித்து.... இறுதிப்போர் முடிந்த பின் ராஜபக்ஷவை முறைத்துக் கொண்டு, கடந்த ஜனாதிபதி தேர்த லில் எதிர் அணியினரின் பொது வேட்பாளராக களமிறங்கி , ராஜபக்ஷவுக்கு ஷாக்கொடுத்தவர் பொன்சேகா. ஜனாதிபதித்தேர்த லில் ராஜபக்ஷ வென்றதும் பழி வாங்கும் படலம் தொடங்கி விட் டது. பல விதமான வழக்குகள் பாய்ச்சப்பட்டு பொன்சேகா உள்ளே தள்ளப்பட்டார். இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு வைத்து இருந்தாகச் சொல்லப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை முதலாவது இராணுவ நீதிமன் றத்திலும் ,இராணுவசட்டத்தை மீறி மோசடியான முறையில் ஆயுதக் கொள்முதல் செய்தாகச் சொல் லப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகள் இரண்டாவது இராணுவ தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்படவில்லை. இராணுவ நீதிமன்றம் எத்தகைய தீர்ப்பை வழங்க முடிவெடுத்தாலும், அது குறித்து சிவில் நீதிமன்றங்க



ளில் ஆலோசனை நடத்துவது பொதுவான வழக்கம். ஆனால், பொன்சேகாவிற்கு எதிரான விவ காரத்தில் இந்த மரபும் பின்பற்றப் படவில்லை. இது போன்ற பல

**ஜூனியர் விகடன்**

விவகாரங்களில் மேல் முறையீடு செய்து வெற்றி பெற்ற வரலாறு கள் உள்ளன. அதன்படி பொன் சேகா மேல் முறையீடு செய்தாலே, அவருடைய பதக்கங்களை அரசால் பறிக்க முடியாது!" என்கிறார்கள் இன்னமும் குலையாத நம்பிக்கையுடன்.

ஆனால்,சிங்கள அரசின் அடுத்தடுத்த 'நகர்வு'களை அறிந் அரசுத்தரப்பு. கடைசிக்கட்டப் போரின் போது,சரணடைந்த புலித்தலைவர்களை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய உத்தரவின் பெயரில் சவேந்தர் சில்வா என்ற அதிகாரி சுட்டுக்கொன்றதாக பொன்சேகா பகிரங்கமாச் சொன் னார். ஆனால், கடைசிக் கட்டப் போரில் அனைத்து உத்தரவுகளுமே பொன்சேகாவால் தான் வழங்கப் பட்டன என இராணுவ நீதிமன் றத்தில் சொல்லி இருக்கும் அரசுத் தரப்பு, 'ஒருவேளை சரண் அடைந்த வர்கள் கொல்லப்பட்டு இருந்தால் அதற்குக் காரணமும் அவர் தான்!' எனச் செல்ல உலகளாவிய குற்றச் சாட்டையும் மொத்தமாக அவர் மீது போட்டு தப்பிக்கத் தயாராகி வரு கிறது. இதை உடைக்கும் விதமாக கடைசிக் கட்டப் போரின் போது,

சிறையில் இருந்தாலும், போர்க் காலத்தில் நிகழ்த்தப்பட்ட மீறல் களை எந்த நேரத்திலும் வெளியி டத் தயாராகி வந்தார் பொன்சேகா. ஐ.நா.குழுவின் விசாரணை தீவிர மாகி வரும் நிலையில், போர்க் கொடூரம் குறித்து பொன்சேகா எப்போது வாய் திறந்தாலும் அது சிங்கள அரசுக்கும் ராஜபக்ஷ சகோ தரர்களுக்கும் தீராத சிக்கல் தான். இதற்காகவே, அவர்மீதான வழக்கு களில் ஏகவேகம் காட்டி அவருக்கு மொத்தமாக முற்றுப்புள்ளி வைக்க சிங்கள அரசு துடிக்கிறது. தற்போது எம்.பி-யாக இருக்கும் பொன்சேகா, இராணுவத்தில் நான்கு நட்சத்திர அந்தஸ்தை பெற்றவர். ஆனால், அதற்குரிய மரபுகளோடு விசாரணை நடத்த வேண்டிய சிங்கள அரசு, சிறைக்குள்ளும் பொன்சேகாவுக்கு பல இடையூறுகளையும் அவமா னங்களையும் கொடுத்துவருவதாகத் தெரிகிறது. சிறை நடவடிக்கை களைத் தொடர்ந்து கவனிக்கும் சிங் கள மீடியாக்கள், 'இங்கேயே அவ ருக்கு முடிவுகட்டப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை!' என்கின்றன.

க்ளஸ்டர் குண்டுகள், பொஸ் பரஷ் அட்டாக் என போர் மரபு களை அடியோடு புறந்த தள்ளி, அப்பாவி மக்களையும் புலிகளை யும் வீழ்த்தி வெ(ற்)றி வீரனாக வலம் வந்த பொன்சேகா, இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கேட்டு "தீவிரவாதத்தின் பிடியிலி ருந்து என் நாட்டைக் காப்பாற்றிய தற்காகவா இந்தத் தண்டனை?" எனப் புலம்பி இருக்கிறார். அப்பாவி ஆடுகளை வேட்டையாடிய ஓநாய்களில் ஒன்று வெளியிடும் அழுணீகயாகவே இப்புலம்பல் அமைகிறது. ✸

பிறர் உன்னைக்கண்டு எள்ளி நகையாடும்படி உன் வாழ்க்கையை நடத்தாதே. கண்ணிய மாக வாழ். ~ இராமானுஜ ஆச்சாரியார்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எரிக்கின்ற வெயில்; புகை கக்கும் வாகனம்; பாருங்கள் எங்கள் யாழ்ப்பாணத்தை

யாழ்ப்பாண நகரம் வாகன நெருசலிலும் மக்கள் கூட்டத்தாலும் திக்குமுக்காடுகிறது. எவரும் எதிர்பார்க்காத வகையில் இத் திடீர் மாற்றம்.

இம் மாற்றம் யாழ்ப்பாண நகரத்தின் போக்கை மிக மோசமாக பாதிக்கும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

இதற்கு மேலாக, மூலை முடுக்கெங்கும் வியாபார நிலையங்கள். காலாறுவதற்குக் கூட இடமில்லை எனும் அளவிற்கு யாழ்ப்பாண நகரத்தின் நெருக்கடி உள்ளது.

யாழ்ப்பாண நகரம் இப்போது நாவலர் வீதி, பிறவுண் வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி என்பவற்றால் வேகமாக முன்னேறிக்கொண்டு செல்கின்றது. இதனால் யாழ்ப்பாண நகரம் விஸ்தரிக்கப்படுகின்றது என்பதற்கப்பால் வீடுகள், ஆலயங்கள், அதன் சுற்றுச் சூழல் மற்றும் உறவுநிலை என்பன நகர மையத்திற்குள் அகப்பட எங்கள் இயற்கையின் எழிலழகை நாம் இழந்துபோகும் பரிதாபத்தில் இருக்கின்றோம்.

இதேநேரம் யாழ்ப்பாண நகரம் என்ற எல்லை கடந்து குச்சொழுங்கைகளில் உள்ள வீடுகளும் விடுதிகளாக மாறிப்போன பரிதாபம் அதிர்ச்சிக்குரியது.

வருமானத்தை மட்டும் மையமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்குவோரால் அயல்வீடுகள் அனுபவிக்கும் அசௌகரியங்கள் ஏராளம்.

இரவு வேளைகளில் விடுதிகளில் இருந்து வரும்பாட்டுக்கச்சேரியும் அதன் இம்சையும் தாங்க முடியாத துன்பம்.

என்ன செய்வது! எங்கள் தலைவிதி அப்படியென்று நினைத்து ஆறுதலடையலாம் என்றால் ஆதவனின் கொடும் வெப்பம் தாங்கமுடியாமல் உள்ளது.

இயற்கையின் மாற்றமும் சீற்றமும் ஒருபுறம். மக்களையும் மாடிக் கட்டிடங்களையும் வாகனங்களையும் தாங்கி நிற்கும் யாழ்ப்பாண நகரம் மரங்கள் ஏதுமின்றி அனல் கக்கும் பரிதாபம் மறுபுறம் என்பதாக எங்கள் வாழ்க்கை கடந்து செல்லும் பாதையில் வரவேற்புத் தருவதற்காக நோய்கள் காத்திருக்கும் கதை வேறு.

இதற்கு மேலாக வாகனங்கள் வெளிவிடும் புகை ஐயகோ! தாங்க முடியாது.

யாரிடம் சொல்வோம். யார்க்கெடுத்துரைப்போம். நாடுபூராகவும் கடும்புகை வெளிவிடும் வாகனங்கள் வீதியில் இறங்குவதற்கு தடை செய்யும் சட்டம் இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் இந்த நிட்டூரம் நின்றபாடல்லை.

அட! நாசமறுப்பு. கைகடித்தால் லைசன்ஸ் பார்க்கும் கலாசாரத்திற்குள் நீர் இன்னுமொன்றைப் புகுத்திவிட்டீர் காணும்.

இனிமேல் கக்குற புகைக்கும் ஒரு தொகை. உருப்பட விடமாட்டீரே!வாகன உரிமையாளர்கள் முணுமுணுப்பதும் கேட்கவே செய்கின்றது.

# இலங்கை அகதிகளை கனடா கையாளும் முறை வரவேற்கத்தக்கது

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சன் சீ கப்பல் மூலம் கனடாவை சென்றடைந்த இலங்கை அகதிகளை அந்த நாட்டு அரசாங்கம் கையாளும் முறையை ஐ.நா.சபை வரவேற்றுள்ளது.

ஜெனீவாவில் ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியீட்ட அந்த அமைப்பின் பேச்சாளர் அன்ரிச் மெக்கே இதனைக் கூறினார்.

கனடாவுக்கு சென்றுள்ள இலங்கை அகதிகள் 490 பேரின் நிலைமை தொடர்பில் தாங்கள் அவதானம் செலுத்தி வருவதாகவும் இலங்கை அகதிகளை கையாள்வதற்கு கனடா மேற்கொண்ட முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் வரவேற்புக்குரியவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற ஐ.நாவின் நிலைப்பாட்டை கனடா பின்பற்றத் தீர்மானித்துள்ளதாகவும் ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 98 பேர் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் 73 ஆயிரத்து 269 பேரும் பிரான்ஸில் 20 ஆயிரத்து464 பேரும் கனடாவில் 19 ஆயிரத்து 143 பேரும் ஜேர்மனியில் 12 ஆயிரத்து 248 பேரும் பிரித்தானியாவில் 8 ஆயிரத்து 615 பேரும் அகதிகளாக வாழ்ந்து வருவதாக ஐ.நாவின் பேச்சாளர் கூறினார்.

இது தவிர சுவிட்சர்லாந்து, மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகளிலும் இலங்கை அகதிகள் அதிகளவில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கனடாவின் குடிவரவு சட்டம் தொடர்பாக மாற்றங்களை கொண்டுவருவதற்கு தயக்கம் காட்டப் போவதில்லை என கனேடியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிவரும் கப்பல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்பேக் குறிப்பிட்டார். ஆட்கடத்தக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஒன்ராறியோவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

கனடா அகதிகளுக்கான ஒரு பூமி எனக் குறிப்பிட்ட அவர் சட்டவிரோதமாக கப்பல்களில் ஏற்றிவரப்படும் குடியேற்றவாசிகளினால் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் கவலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதனை கையாள்வது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு எனவும் இந்த நிலை தொடர்பான சட்டங்களை மாற்றியமைப்பதற்கு தயக்கம் காட்டப்போவதில்லை எனவும் கனேடிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## வைத்திய உபகரணங்கள் வைபவரீதியாக கையளிப்பு

(நல்லூர்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு கோப்பாய் லயன்ஸ்கழகத்தினால், ஒருதொகைவைத்திய உபகரணங்கள் இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வைத்தியசாலையில் வைத்து வைபவரீதியாக வழங்கப்படவுள்ளது.

இதில் நீரிழிவு நோயாளர்களுக்கான இரத்தப் பரிசோதனை கருவி, இரத்தம் பரிசோதிக்கும் ESR ஸ்ராண்ட் ஆகிய உபகரணங்களும் நோயாளர் விடுதிகளுக்குத் தேவையான போர்வைகள், துவாய்கள், தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றையும் லயன்ஸ் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா வழங்கவுள்ளார்.

சுகாதார இணைப்பாளர் அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள குறைகளை கேட்டறிந்தபோது வைத்தியசாலை நிர்வாகம் குறித்த உபகரணங்கள் இல்லை என தெரிவித்ததை அடுத்தே இவ் உபகரணங்கள் வழங்கப்படுவதாகஅவர் தெரிவித்துள்ளார். (6-4-134)

## மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி

(கொழும்பு)

அவுஸ்ரேலியன் இன்பத்தமிழ் வானொலியின் பணிப்பாளர் பா.பிரபாகரனின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 100 குடும்பங்களிற்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வாழ்வாதார மேம்பாட்டிற்கான நிதியு தவியாக வழங்கப்பட்டுள்ளது.

இவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வழங்கி வைத்தார். இதில் மணியங்குளம், அம்பாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே மேற்படி நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கிராமமக்கள், புலம்பெயர்ந்த சமூகத்தின் இந்த உதவியை நன்றியுடன் பாராட்டினர். (ச-5)

## பாபா நம்பியவர்க்கு செம்பொன். நம்பாதவர்க்கு தூசி

வெங்கட நரசய்யா, புக்க பட்டினம் எனுமிடத்தை சொந்த இடமாகக் கொண்ட இவர் ஒரு இராமபக்தர். இராமகாவியங்களை பிரசங்கம் செய்வதில் மிகவும் வல்லவர். ஒருமுறை இராம காவியத்தை சொற்பொழிவாற்றி விட்டு ஓய்வாக இருந்தவேளை அவரின் மேல் மிகுந்த பற்றுள்ள ஒரு அன்பர் அவரிடம் வந்து, ஐயா நீங்கள் திரேதாயுகத்திலிருந்த இராமபிரானைப் பற்றி பேசுகின்றீர்கள். அவரை நேரில் காண்பது போலவே கூறுகின்றீர்கள். திரேதாயுகத்தில் இராமனும் துவாரக யுகத்தில் கிருஷ்ணனும் தான் இன்றைய கலியுகத்தில் பிரசாந்தி நிலையத்தில் எல்லாம் வல்ல ஸ்ரீ சத்ய சாயி பாபாவாக அவதரித்துள்ளார். ''**நீங்கள் சென்று அவரைத் தரிசனம் செய்யுங்கள்**'' என்றார். அதற்கு வெங்கட நரசய்யர், நம்பிக்கையில்லாமல் அது எப்படி முடியும் என்றாராம்.

பாபாவின் சங்கல்பம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அன்றிரவே அவருக்கு கடுமையான காய்ச்சலாக இருந்தது. மறுநாள் மாலை சொற்பொழிவு நிகழ்வு வேறு இருந்தது. எப்படிச் செய்வது என்ற கவலையோடு என் ஸ்ரீராமனை இந்த சாயிராம் என்றால் என்னுடைய காய்ச்சலைக் குறைக்கட்டும் என்றாராம்.

சிறிதுநேரத்தில் காய்ச்சலும் குறைந்துவிட்டது. ஆனால் சுவாமியை முழுமையாக நம்புவது முடியாமல் போகவே அவரைச் சோதனை செய்வது போல் குளிர் நீர் குளத்தில் இறங்கி நீராடினார். மதியம் வயிறார சாப்பிட்டார். காய்ச்சல் என்பதைக் காணவில்லை. இனியேனும் சாயிநாராயணனை நம்பாமல் இருக்கமுடியாது என்றெண்ணி பிரசாந்திக்குப் புறப்பட்டு பஸ்ஸுக்காக காத்திருந்தார். அவரருகில் சீடர்கள் பலரும் நின்றிருந்தனர். தனது இருக்கைகளை நிரப்பிக் கொண்டு வேகமாக வந்த அவ் பஸ்ஸை ஒருவாறு நிறுத்தி, ஒருவர் மட்டும் வரலாம் என்றார் சாரதி. அதற்கு சீடர்கள் ஏறுபவர் ஒருவர் மட்டும் தான், எங்கள் குருவிற்கு இடமளித்தால் போதும் என்றார்கள்.




ஒருவாறு பஸ்ஸில் ஏறிய அவரை சக பிரயாணிகள் புட்டபத்திக்கு அழைத்துச் சென்றனர். எண்ணற்ற பக்தர்கள் மத்தியில் சுவாமியை எவ்வாறு காண்பது என்றெண்ணி மனதில் வேதனை கொண்டவராக பாபாவே எனது இராமர் என்றால் எனக்கு காட்சி தரவேண்டும் என எண்ணினாராம். அடியார்களை தவிக்க விடலாகாது என்பது போல பாபாவும் கீழே இறங்கி வந்து நரசய்யா, எப்போது வந்தாய், காய்ச்சல் குறைந்து விட்டதா எனக் கேட்டாராம். அவருக்கோ ஆச்சரியம் சுவாமிக்கு என் பெயர் கூடத் தெரிகிறதே என்று நினைத்த போது, பஸ்ஸில் உனக்கு மட்டுமல்லவா இருக்கை கிடைத்தது.

சந்தோசம் என்றாராம். சுவாமி எல்லாம் அறிபவர் என்பதைப் புரிந்து கொண்டாராம் நரசய்யர். மனிதர்கள் ஆணவ மிகுதியால் தங்களைக் கடவுளாக காட்சிப்படுத்துவதனால் கடவுளான இராமனும் கிருஷ்ணரும் தம்மை மனிதர் என்றனர். எல்லாம் வல்ல சாயி நாதனும் மனிதருக்குள் மனிதராக தன் நாடகத்தை நடத்தி வருகிறார்.

*ஜெய்சாயிராம்* *யாதவன்*

# சர்வதேச அளவில் இரண்டாம் தர நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடக்கூடாது

## ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

இந்தியா , சீனா போன்ற நாட்டு மக்களைப் போல வேலைவாய்ப்புக்காக போராடும் நிலை அமெரிக்காவில் ஏற்படக்கூடாது என ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரம் ஒன்றில் அவர் உரையாற்றுகையில் , சர்வதேச அளவில் அமெரிக்கா இரண்டாம் தர இடத்திற்கு சென்று விடக்கூடாது இந்தியா, சீனா , தென்கொரியா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளைப் போல வேலைவாய்ப்புக்காக போராடும் நிலை அமெரிக்காவில் ஏற்படக்கூடாது. மற்ற நாடுகளில் இருந்து சூரிய சக்தி தகடுகளை வாங்குவது ,மின் வாகனங்களை வாங்கும் நிலை இருக்கக் கூடாது எவ்வித பொருளாக இருந்தாலும் அந்தப் பொருளில் மேட் இன் அமெரிக்கா என்று பொறிக்கப்பட்டு இருக்க வேண்டும். அந்தப் பொருள் உலகம் முழு வதும் விற்பனை செய்யப்பட வேண்டும். அந்த நிலையை ஏற்படுத்த வேண்டும். முடியும் என்றால் கண்டிப்பாக நாம் இதை சாதித்துக் காட்ட முடியும் . நம்மால் முடியாது என நினைக்கக்கூடாது. பொருளாதார மந்த நிலையை கடந்து விட்டோம். கடந்த கால நிலையை விட பொருளாதாரத்தில் மிஞ்ச வேண்டும் சுற்றுச் சூழல் மாசுபடாத அளவில் தொழிற்சாலை களை உருவாக்க வேண்டும் பாலம் ,வீதிகள் என்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளோடு நின்று விடாமல் அதிவேக இன்ரர் நெட் வசதி , அதி வேக புகையிரதப் பாதை ,நூற்றுக்க ணக்கான தனியார் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். கடுமையாக உழைத் தால் இந்த இலக்குகளை நாம் அடைய முடியும் என்றார். (6-2)

# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு; அமெ.வீரர்கள் உட்பட 11 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வெவ்வேறு இடங்களில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பழங்குடி இனத் தலைவர் மற்றும் மூன்று அமெரிக்க வீரர்கள் உட்பட 11 பேர் பலியாயினர்.

தெற்கு காந்தஹாரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பழங்குடி இனத்தலைவரான சகாரியா கான் என்பவர் அவருடைய கடையில் இருந்த போது, குண்டு வெடித்ததால் பலியானார். இச்சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

இரண்டு அமெரிக்க வீரர்கள் கிழக்கு ஆப்கானிஸ்தானிலும் மற்றொரு வீரர் மேற்கு ஆப்கானிஸ்தானிலும் பலியானதாக நேட்டோ பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. பலியானவர்களின் விவரங்களையும் எப்படி குண்டு வெடிப்பு நிகழ்ந்தது என்பதையும் கூற மறுத்து விட்டது.

இம் மாதத்தில் மட்டும் 15 அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்புக்கு பலியாகியுள்ளனர்.

இதுபோல கிழக்கு காச்னி மாகாணத்தில் மோட்டார்சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இதில் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இரண்டு துப்பரவு தொழிலை மேற்கொள்பவர்கள் பலியாயினர்.

மேலும் ஐந்து பேர் இதில் காயமடைந்தனர். அவ்வழியாக வந்த இராணுவ வாகனத்தை குறி வைத்து இந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதுபோல கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் மூன்று பெண்கள் உட்பட ஐந்து பேர் பலியாகினர். இச்சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர். (6-2)

# பாலஸ்தீனத்துடன் மீண்டும் அமைதிப்பேச்சு; முன் நிபந்தனைகளை ஏற்க முடியாது

## இஸ்ரேல் அறிவிப்பு

(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்துடன் மீண்டும் நேரடி அமைதிப்பேச்சை நடத்த தயாராகவுள்ளோம். ஆனால் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக எவ்வித முன் நிபந்தனையையும் ஏற்க மாட்டோம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. கிரீஸ் நாட்டுக்கு சென்றுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமீன் நெதான்யாகு நேற்று முன்தினம் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

பாலஸ்தீனத்துடன் நிரந்தரமான தீர்வை எட்டவே விரும்புகிறோம். இதைக் கருத்தில் கொண்டு அந்நாட்டுடன் நேரடியான அமைதிப் பேச்சை தொடங்கவும் தயாராகவுள்ளோம். இரு நாடுகளுக்கு இடையேயான பேச்சவார்த்தை விரைவில் தொடங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

அப்படிப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் பட்சத்தில் அதில் பாலஸ்தீனம் தனது கருத்துகளை வெளிப்படுத்தலாம். விவாதிக்கலாம் என்றும் பெஞ்சமீன் நெதன்யாகு கூறினார்.

நேரடிப்பேச்சுக்கு பல முறை விருப்பம் தெரிவித்தோம். ஆனால் அதையெல்லாம் பாலஸ்தீனம் பொருட்படுத்தவில்லை. வாய்ப்பைப்பயன்படுத்திக்கொள்ளவில்லை. எங்களது அழைப்புக்கு மறுப்புத் தெரிவித்து விலை மதிப்பற்ற நேரத்தை வீணடித்து விட்டது என்று நெதன்யாகுடன் சென்றுள்ள இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான அமைதிப்பேச்சு கடந்த 2008இல் தடைப்பட்டது. இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையே பிரச்சினை நீடித்துவருவதால் அமைதிப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது. இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் நேரடிப்பேச்சை ஆரம்பிப் பதற்கான முயற்சியை அமெரிக்கா சமீபத்தில் மேற்கொண்டது. ஆனால் நேரடிப்பேச்சுக்கு பாலஸ்தீனம் சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் இரு நாடுகளும் அமைதிப்பேச்சை ஆரம்பிக்குமாறு அமெரிக்காவும் ரஷ்யாவும் மீண்டும் நெருக்குதல் அளிக்கும் என்றும் தெரியவருகிறது. (6-2)

# பாகிஸ்தானுக்கு உலக வங்கி 5400 கோடி ரூபாய் நிதியுதவி

(வோஷிங்டன்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு உலக வங்கி ரூ5 ஆயிரத்து 400 கோடி நிதியுதவி அளிக்க சம்மதம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானில் சமீபத்தில் பெய்த பலத்த மழையால் அங்கு வரலாறு காணாத அளவிற்கு வெள்ளம் ஏற்பட்டது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள் இலட்சக்கணக்கான பேர் வீடுகளை இழந்தனர்.

பாகிஸ்தானில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்து வருகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ உலக வங்கியிடம் ரூ.5 ஆயிரத்து 400 கோடி ரூபா வழங்கும்படி கேட்டுக் கொண்டது.

இதை ஏற்ற உலக வங்கி அத்தொகையை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது. மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பு கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்பை விட அதிகம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். (6-2)

# பொன்னி அரிசியின் பெயரை பயன்படுத்த மலேசிய நிறுவனத்துக்கு தடைவிதிப்பு

(கோலாலம்பூர்)

பொன்னி அரிசியின் பெயரைப் பயன்படுத்த மலேசிய நிறுவனத்துக்கு அந்நாட்டு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. ஸ்யாரிகட் ஃபெய்சா என்ற மலேசிய நிறுவனம் பொன்னி என்ற பெயரை 2006 இல் பதிவு செய்து அரிசி விற்பனையில் ஈடுபட்டது.

இதை எதிர்த்து இந்திய வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் , தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் , இந்திய விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோர் சிலர் கடந்த ஜனவரி 22 இல் மலேசிய உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக தனது தீர்ப்பில் நீதிபதி அசார் முகமது தெரிவித்துள்ளதாவது,

பொன்னி என்பது தமிழகத்தில் காவிரியின் மற்றொரு பெயர் ஆகும். அந்தப் பகுதியில்தான் விளையும் அரிசிக்கு பெயர் பொன்னி. அந்த வார்த்தையை மலேசிய நிறுவனம் பயன்படுத்துவது குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, மலேசிய வர்த்தக இலச்சினைகளுக்கான பதிவேட்டில் இருந்து பொன்னி என்பது நீக்கப்பட வேண்டும். நீக்கப்பட்ட செய்தி அரசிதழிலும் வெளியிடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். (6-2)




# ஈராக்கில் தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதல் 61 பேர் பலி ; நூற்றுக்கணக்கானோர் காயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள இராணுவ தலைமையகத்தில் இராணுவ வேலைக்கு ஆள் எடுக்கும் பணி நடந்து வருகிறது. இறுதி நாளான நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியில் இருந்தே ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இராணுவ தலைமையலுவலகம் முன்பு கூடியிருந்தனர்.

தற்போது அங்கு தீவிரவாதிகள் தாக்குதல் நடைபெறுவதால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அதையும் மீறி தற்கொலைத் தீவிரவாதி ஒருவன் இராணுவத்தில் சேர வந்தவர்களுடன் இலகுவாக ஊடுருவினான் . பின்னர் இராணுவ தலைமையகத்திற்கு வெளியே கூட்டத்தில் புகுந்த அவன் தனது உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த குண்டை வெடிக்கச் செய்தான். இக்குண்டு வெடித்ததில் 61 பேர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர்.

பலியானவர்களின் உடல்கள் சதையும், இரத்தமுமாக துண்டு துண்டாக சிதறிக்கிடந்தன. உயிர் தப்பியவர்கள் ஒருவரையொருவர் முண்டியடித்தபடி அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். இதனால் அப்பகுதி முழுவதும் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது.

குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்க்கும் பணியில் இராணுவமும் பொலிஸாரும் ஈடுபட்டனர். தற்போது ஈராக்கில் அமெரிக்க இராணுவ வீரர்கள் 50 ஆயிரம் பேர் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் விரைவில் ஈராக்கை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளனர். அவர்களின் தீவிர கண்காணிப்பு இருந்தும் இங்கு தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. எனவே , அமெரிக்கப்படைகள் இங்கிருந்து வாபஸ் பெற சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே ஈராக்கில் சமீபத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் இது மிகவும் மோசமானதாகக் கருதப்படுகிறது. (6-2)

# யூரேனியம் செறிவூட்டும் மேலுமொரு ஆலையை அமைக்கவுள்ளது ஈரான்

## வல்லரசு நாடுகளுக்கு மற்றுமொரு சவால்

மேலும் ஒரு யூரேனியம் செறிவூட்டும் ஆலையை அமைக்க ஈரான் தயாராகியுள்ளது. 2011 ஆம் ஆண்டில் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் ஒரு வருடத்தில் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வல்லரசு நாடுகளுக்கு சவால் விடும் வகையில் இந்த யூரேனியம் செறிவூட்டும் ஆலையை ஆரம்பிப்பதாக ஈரான் அணு சக்தி அமைப்பின் தலைவர் அலி அக்பர் கூறியுள்ளார்.

ஈரானில் ஏற்கனவே 2 யூரேனியம் செறிவூட்டும் ஆலைகள் செயற்பட்டு வருகின்றன. இப்போது மூன்றாவது ஆலையை அமைக்கவுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாக ஏற்கெனவே அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. இந்நிலையில் ஈரானின் இந்த நடவடிக்கை அனைத்து நாடுகளாலும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. (6-2)

# ரான்டீவ் 'நோபோல்' விவகாரம்; சதி செய்யத் தூண்டியவர் டில்சான்!

## முழுப்பொறுப்பையும் நானே ஏற்கிறேன்-சங்கக்கார



தம்புள்ளவில் நடைபெறும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இந்தியக் கிரிக்கெட் வீரர் சேவாக்கின் சதம் பெறும் வாய்ப்பைத் தடுக்கும் வகையில் முறையற்ற பந்தை வீசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை அணியின் வீரர் சுறாஜ் ரான்டீவுக்கு ஒரு சர்வதேச ஒரு நாள் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடைசியாக அவர் இந்திய அணியுடன் விளையாடிய போட்டிச் சம்பளமும் நீக்கப்பட்டுள்ளது.

ரான்டீவை முறையற்ற பந்தை வீசுவதற்கான ஆலோசனையை வழங்கியதாக திலகரட்ண டில்சானுக்கும் இந்திய அணியுடனான போட்டிச் சம்பளத்தில் 50 சதவீதம் நீக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கையின் தி ஐலன்ட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், ரான்டீவிடம் நோ போல் போடுமாறு டில்சான்தான் யோசனை தெரிவித்துள்ளார். அப்போது கவர் பொயின்ட்டில் அவர் களத்தடுப்புச் செய்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் சுறாஜ் ரான்டீவைப் பார்த்து சிங்களத்தில் சத்தமாக ஓனே நாம், நோ போல் ஏகாக் தன்னா புல்வான் நீ விரும்பினால், பேசாமல் நோ போல் போட்டு விடு என்று கூறினார் டில்சான்.

அவர் அப்படிக் கூறியபோது அருகில் இருந்த எந்த வீரரும் அதைத் தடுக்க முன்வரவில்லை என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்காரவுக்கு இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவுரை வழங்கியுள்ளது.

இதற்கிடையே இந்த அசிங்கமான நிகழ்வுக்குத் தானே பொறுப்பேற்பதாக சங்கக்கார கூறியுள்ளார். இது தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

கிரிக்கெட்டில் சில விடயங்களை அதிரடியாகச் செய்து எதிரணிக்கு நெருக்கடி கொடுப்பது வழக்கமானதுதான். அது போட்டியில் ஒரு அங்கமாக இருக்கும். ஆனால்இப்போது எழுந்துள்ள நோ போல் விவகாரம் வேறு மாதிரியானது.

இது தவறானது என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்றார்.



# சூழ்ச்சியில் சிக்கிய வீரேந்திர சேவாக்; இலங்கை அணியின் அநாகரிக ஆட்டம்

## இந்தியப் பத்திரிகை குமுறல்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் நாகரிகமான ஆட்டம் நாளுக்கு நாள் தேய்வடைந்து தடம்மாறி, திசை மாறி, சீரழிந்து வருகின்றது. இதனை இந்தியாவுக்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமை நடந்த போட்டியின் நிகழ்வு மீண்டும் உறுதி செய்துள்ளது. இவ்வாறு இந்தியப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தம்புள்ளயில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்த்து இலங்கை அணி களம் இறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணியே வெற்றி பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மைதானத்தில், இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆனால் இந்திய வீரர்களே சிறப்பான பந்து வீச்சில் இலங்கை அணி 170 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. பின்னர் களமிறங்கிய இந்திய அணிக்கு வீரேந்திர சேவாக்கின் அபார ஆட்டத்தால் வெற்றி இலக்கை 34 ஓவரிலேயே எட்டி வெற்றி பெற்றது.

ஆனால் அந்த வெற்றி ஓட்டத்தினை நோ போல் மூலம் இலங்கை அணி வீரர் ரான்டீவ் விட்டுக் கொடுத்ததும் அல்லாமல், சேவாக்கின் சதத்தையும் தட்டிப் பறித்ததுதான் கிரிக்கெட் உலகை இலங்கை பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இந்த விவகாரத்திற்கு அடி நாதமாக இருந்து செயற்பட்டவர் இலங்கை அணித் தலைவர் சங்கக்கார என்றே தெரிய வருகின்றது.

இத்தகைய மோசமான செயலைச் செய்ததால் பல நாடுகளின் கிரிக்கெட் நோக்கர்களும் முன்னாள் வீரர்களும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

### தண்டிக்க வேண்டும்

குறிப்பாக நியூசிலாந்து வீரர் ஹரிஸ், சுறாஜ் டான்டீவின் செயல் வேண்டுமென்றே அவர் எல்லைக் கோட்டுக்கு வெளியே பந்து வீசியுள்ளார். அவரது இடது காலும் வலது காலும் வைத்துப் பார்க்கையில் இது எதேச்சையாக நடந்ததாகக் கருத முடியாது.

இது போன்று செயற்படும் வீரர்களைக் கண்டிப்பாகத் தண்டிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

முன்னாள் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி, இது இலங்கை வீரர்களின் மோசமான செயல் என்றும் இதுபோல் இலங்கை வீரர்கள் ஒருமுறை தனக்கும் கேடு விளைவித்தனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுபோன்ற செயலை சர்வதேச போட்டியில் வீரர்கள் செயல்படுவது ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று அஜேய் ஜடேஜா கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்துள்ளார்.

ஆனால் சதத்தைத் தவற விட்ட சேவாக், இளம் வீரரான ரான்டீவின் இத்தகைய செயல் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் இது மற்ற நாட்டு வீரர்களின் சாதாரண செயலாகத்தான் கருதுவதாகவும் இதை வீரர்களாகத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தன்னிடம் சுறாஜ் ரான்டீவ் மன்னிப்புக் கேட்டிருப்பதாக டிவிட்டரிலும் கூறியுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபை மன்னிப்புக் கேட்ட பின்னர் இலங்கை அணித் தலைவர் சங்கக்கார தானும் மன்னிப்புக் கோருவதாக இந்தியப் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் தான் இந்தியக் கிரிக்கெட் வீரரான சேவாக்கைக் கட்டுப்படுத்தத்தான் சொன்னேன். ஆனால் ரான்டீவ் நோ போல் வீசி விட்டார் என்று மழுப்பலாகப் பதிலளிக்க, எலி தானே வந்து கூண்டில் மாட்டும் என்பதுபோல சங்கக்காரவின் இந்தக் கருத்து இந்திய நிருபர்களைக் குடையவே, தற்போது ஸ்ரொம்பில் பொருத்தியுள்ள மைக் ஆய்வு செய்யப்பட்டது.

அதில் ரான்டீவுக்கு சங்கக்கார சிங்கள மொழியில் இடும் கட்டளை இப்படிப் பதிவாகியுள்ளது,

'ஹாய் உஷார், இவன் பந்தை அடித்து விட்டால் ஓட்டம் எடுத்து விடுவான்' இவ்வாறு ஸ்ரொம் மைக்கில் பதிவாகியுள்ளது எனக் கிரிக்கெட் வட்டாரங்கள் உறுதிபடத் தெரிவிக்கின்றன.

எப்போதும் கிறிஸுக்குப் பின்னால் இருந்தே துல்லியமாகப் பந்து வீசும் ரான்டீவ், சங்கக்கார கட்டளையை ஏற்றுத்தான் நோ போல் வீசியிருப்பதாக அறியப்பட்டுள்ளது.

ஆக, இந்த விடயத்தில் தலைவரின் வழி நடந்த ரான்டீவ் அப்பாவி என்பதும் விளையாட்டின் உன்னதத்தை உதாசீனப்படுத்தி தவறான கட்டளையிட்ட அணித் தலைவர் சங்கக்காரவே குற்றம் செய்தவர் எனவும் தெரிய வருகின்றது.

ஆனால் இது ஒன்றும் இலங்கை வீரர்களுக்குப் புதிதல்ல. அவர்கள் கிரிக்கெட் விளையாடும் ஸ்ரைலே இதுதான். உலகத்தில் எங்கேயும் நடக்காத, எந்த வீரரும் நினைத்துக் கூடப் பார்க்காத ஒரு மோசமான செயலை மூன்று முறை நிகழ்த்திய பெருமை இலங்கை அணியையே சார்ந்துள்ளது.

அதில் முக்கியமான ஒரு உதாரணம் கடந்த 2009 டிசம்பர் மாதம் இந்தியாவில் உள்ள கட்டாக் மைதானத்தில் நடந்த ஒரு போட்டியில் இலங்கை அணி வீரர்கள் இத்தகைய செயலைச் செய்துள்ளனர்.

அப்போது சச்சின் 91 ஓட்டங்களுடன் 43 ஆவது ஓவரை எதிர்கொண்டார். இந்திய அணியின் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சச்சின், இரண்டாவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார்.

மூன்றாவது பந்தை எதிர் கொண்ட தினேஷ் கார்த்திக் ஒரு ஓட்டம் எடுக்க முற்படுவதை அறிந்து ஏடாகூட பந்து வீச்சாளர் மலிங்க வேண்டுமென்றே உலகத்தில் யாருமே போாத... நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு பெரிய வைற்றாக ஒரு பந்தை வீசி அதை பவுண்டரியாகவும் மாற்றி இந்திய அணியை வெற்றி பெறச் செய்தார்.

அவரின் நல்ல மனதுக்கு அப்போது சச்சினின் சதம் பறிபோனது. அதற்கு இந்திய அணி போனால் போகட்டும் விட்டுவிடுங்கள் என்று நினைத்ததன் பலன்தான் தற்போது சேவாக்கின் சதமும் தடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளூர்க் கிரிக்கெட் போட்டியில் தரப்படும் முறையற்ற பயிற்சிகளும் இத்தகைய உத்திகளை அவர்களிடம் ஊக்கப்படுத்துவதால்தான் இதுபோன்ற செயல்களில் இலங்கை வீரர்கள் அவ்வப்போது நிகழ்த்திக்காட்டுகின்றனர் என்று விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய அரசின் சிறப்புப் பிரதிநிதி...

இலங்கைக்குச் சிறப்புத் தூதரை அனுப்புவது தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் நிருபமா ராவ் சென்னையில் நேற்று முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

முதல்வர் கருணாநிதி கடந்த மாதம் மூன்றாம் திகதி இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அதன்பின் கடந்த மாதம் 17 ஆம் திகதி மற்றொரு கடிதத்தையும் எழுதியிருந்தார். அக் கடிதத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் எதிர்பார்த்தளவில்லை. எனவே இலங்கையின் உண்மைநிலையை அறிய சிறப்புத் தூதுவரை அனுப்ப வேண்டும்என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந் நிலையில் தமிழர் பகுதிக்குச் சிறப்புப் பிரதிநிதி அனுப்பக் கோரி முதல்வர் கருணாநிதி எழுதிய கடிதம் பற்றி அவருடன் ஆலோசனை நடத்துவதற்காக வெளியுறவுத்துறைச் செயலாளர் நிருபமா ராவை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அனுப்பி வைத்தார்.

அதன்படி சென்னைக்குச் சென்ற நிருபமா ராவ் நேற்று முதல்வரைச் சந்தித்தார். முதல்வருடான சந்திப்பினைத் தொடர்ந்து நிருபமா ராவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கானமீள்குடியேற்றம்மற்றும் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட இந்தியா விரும்புகின்றது.

அதுபற்றித் தமிழக முதலமைச்சரிடம் ஆலோசனை நடத்தினேன். இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் குறித்து அவர்களுடன் பேசி வருகின்றோம்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மட்டுமே போதுமானதில்லை. அங்கு மேம்பாடுமற்றும் வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும்.

விவசாயம், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் சீரமைக்கப்பட்டு விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் முதலமைச்சருடன் பேசினேன்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தர இந்திய அரசு முன்வந்துள்ள நிலையில் முதல்கட்டமாக [illegible] ஆயிரம் வீடுகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியத் தூதரக அலுவலகம் திறக்கப்படும். இலங்கையின் தென்பகுதியிலும் தூதரக அலுவலகம் திறக்கப்படும் என்றும் நிருபமா ராவ் கூறியுள்ளார். (ச-5)

## போர் நிறுத்த உடன்படிக்கை...

விடுதலைப்புலிகளும் படைத்தரப்பை சந்தேகமாகப் பார்த்தனர்.

தென்மராட்சி, தனங்கிளப்பு பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விவசாயத்திற்காக படைத்தரப்பு விடுவித்த போதும் விடுதலைப் புலிகள் விவசாயிகளை அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

இது அவர்களுக்கு படைத்தரப்பின்மீது இருந்த சந்தேகத்தை வெளிப்படுத்தியது.

அத்துடன் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தமது கடமையை நியாயமான ரீதியில் முன்னெடுத்த போதும் அதற்கு அதிகாரங்களோ, வளங்களோ வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்காக அவர்களுக்கு ஆயுதங்கள்வழங்கப்பட்டிருக்கவேண்டும்என நான் கூறவர வில்லை. சம்பந்தப்பட்டதரப்புக்களைக்கட்டுப்படுத்த அவர்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

இதேபோன்று அரசாங்கத்தரப்பிலும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சந்தேகம் ஏற்பட்டிருந்த அதே நேரம் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கத்தின்மீது சந்தேகத்தைக் கொண்டிருந்தார்கள்.

இதேவேளை போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்த காலத்தில் சர்வதேசத்திலிருந்து சிறுசிறு அழுத்தங்கள் ஏற்பட்ட போதும் 4.5 பில்லியன் டொலர்கள் நிதியுதவியை இலங்கைக்கு வழங்க சர்வதேசம் இணங்கியமை சாதகமான நிலையை ஏற்படுத்தியதாக ஒஸ்ரின் பெர்ணாண்டோ தெரிவித்தார். (ச-5)

## ஈழ அகதி...

பயன்படுத்திக் கொண்டு சட்டவிரோதமாக கனடாவுக்குள் வருவோர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்டீவன் ஹார்பர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## சகல கட்சிகளினதும் இணக்...

இதனைக் கூறியுள்ளார். அரசியலமைப்புத் திருத்தங்கள் அரசாங்கத்திற்குத் தேவையான வகையில் மேற்கொள்ள முடியாது.

அவற்றின் சில திருத்தங்களை நாடாளு மன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும் பான்மை மூலமும் ஏனையவற்றை சர்வஜன வாக்கெடுப்பு மூலமும் நிறைவேற்ற வேண்டும்.

அரசியலமைப்புத் திருத்தம் என்பது மிகவும் பாரிய நடவடிக்கையாகும்.

அதனை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலின் பேரில் மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

அரசியலமைப்புத்திருத்தங்கள் சம்பந்தமாக எதிர்க்கட்சித்தலைவருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பான திருத்தங்கள் குறித்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ச-5)

## யாழ்.பல்கலை...

பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு பயிற்சி பெற்ற மூன்று மருத்துவர்களை புனர்வாழ்வுமையங்களில் நான் சந்தித்துள்ளேன்.

குறித்த மருத்துவர்கள் சேனபுர புனர்வாழ்வு மையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் காரணமாக சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வியைத் தொடர விரும்பவில்லை எனவும் இதனால் ஏற்படும் வெற்றிடங்களுக்கு புலி உறுப்பினர்கள் அனுமதி பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## விடுதலைப்...

விசாரணை செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அரசாங்கம் அவர்களை முன்னதாகவே விடுதலைசெய்தால் அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கக்கூடும் என தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 200 இலிருந்து...

குடியேற்றுவது என்ற நிலைப்பாட்டை தீவிரப்படுத்தி வருகிறது.

கிளிநொச்சி மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இரணைமடுக்குளப் பகுதியிலேயே இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முறிகண்டியிலும் படையினருக்கான குடியிருப்புக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## சிங்களக் காடையர்களின் தாக்...

மோதிக் கொண்டனர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழர்களின் வாக்குரிமைகளை ஐக்கிய தேசியக் கட்சி பறித்துவிட்டது.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியினர் செயல்பட்டனர். இதுவே 1983ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரத்துக்கு காரணம்ஆனது.அரசின்தற்போதைய பேச்சாளர் தேசத்தின் ஒட்டுமொத்த நலனையும் மனதில் நிறுத்தி மனப்பக்குவம், முன்யோசனை, விவேகம் ஆகியவற்றுடன்கருத்துக்களைவெளியிட வேண்டும்.

கடந்த கால போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக அமுலுக்கு வரப்படாமைக்கு பரஸ்பர நம்பிக்கையின்மையே காரணம். இந்தப் போரை இனப் போராகவோ தீவிரவாதத்துக்கு எதிரான போராகவோ கருத முடியாது.

இது முற்றுமுழுதான அரசியல் நோக்கம் கொண்ட போராகும். முன்பொரு காலத்தில் தமிழர்களும் சிங்களவர்களும்ஒற்றுமையுடன்இணைந்தே வாழ்ந்தனர். ஒன்றாகப் பணியாற்றினர். ஆனால் சுதந்திரம் பெற்ற பின்னர்நாட்டின் தலைவர்கள் பொறாமையால் உந்தப்பட்டனர்.

தீவிரவாதம் காலப்போக்கில் ஏற்பட்ட ஒன்றுதான். இந்நாட்டின் இரண்டு முக்கிய கட்சிகளின் தலைவர்களுமே பொறாமையுடன் ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்துகின்றமை ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயற்பட்டனர். அவர்களில் அரசியல் பக்குவம் குறைந்து போனது.

இதன் பின்னர் வடக்குப்பகுதியில் நடந்த தேர்தல்களில் இளைய சமுதாயம் சோர்வுடன் உற்சா மின்றி காணப்பட்டது. இதன் விளை வாகவே அனைத்து அரசியல் கட்சிகளையும் தீவிரவாத குழுக்களையும் அகற்றி விட்டு பிரபாகரன் களமிறங்கினார்.

வடக்கு பகுதியில் இடம் பெற்ற தேர் தல்கள் ஜனநாயக ரீதியில் நடக்குமானல் இளைஞர்கள் வன்முறை பாதைக்கு சென்றிருக்க மாட்டார்கள்.ஆனல் அனைத்துமே தலை கீழாக இருந்தன.

தேச நலனில் அக்கறை இன்றி செயற்படுகின்றமையும் ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கிற நினைப்பால் சண்டை இடுகின்றமையும் அரசியல்வாதிகள்விட்டு விடவேண்டும்.

நாட்டுமக்களுக்காகஒற்றுமையுடன் உழைக்க முன்வர வேண்டும் என்றார். (ச-5)


### வாழ்த்துகின்றோம்

25 ஆவது ஆண்டு மண வாழ்வின் நிறைவில்
எமது அன்பிற்குரிய பெற்றோர்
திரு.திருமதி யாதவகுலசிங்கம்
தம்பதியினரை மேன்மேலும் சிறப்புடன்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்தி நிற்கும்,
பிள்ளைகள்

மோதர,
கொழும்பு - 15
(இ)



### திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

### அற்றைத் திங்கள்

(கூத்துருவ நாடகம்)

காலம் : 21,22.08.2010 (சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 6.45 மணி
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

முல்லைக்கு தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின்
வீர வரலாற்றினை ஈழத்தின் பல்வேறு
கூத்துமரபுகளின் ஒன்றிணைப்பினூடாக
வெளிப்படுத்தும் அரங்கப் படைப்பு

ஆசனப்பதிவுகளை மன்ற அலுவலகத்தில் செய்து கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-889)
திருமறைக் கலாமன்றம்



### தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு ஏ-9 வீதியில் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தரவும்.

0778264731
0779103584 (C-894)



PHYSICS A/L 2012
PAPER CLASS
வினாவிடை வகுப்பு
ஆரம்பம்: 20.08.2010 வெள்ளி
(05.15-6.15 PM)
ஆசிரியர் திரு. M.SPELLMEN (B.Sc)
உரிய காலத்தில் முழுமையான பாடத்திட்டம் முடிக்கப்படும்.
இடம் :- NEW SCIENCE CENTRE
Jaffna Town (2195)



தரம் 05
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு!
ஒரு நற்செய்தி

2010ம் ஆண்டு 08ம் மாதம் 22ம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராக உள்ள மாணவர்களுக்கு பெரும் சிரமத்தின் மத்தியிலும்.

இறுதி நேரத்தில்
முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய
5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் 120/-

நேற்றைய வலம்புரியில் வெளியாகிய எமது விளம்பரத்தில் வினாத்தாள் பெற்றுக்கொள்ளும் புத்தகசாலையின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

*வினாத்தாள் புத்தக சாலையில் முடிவுற்றால் இன்று மதியம் 12 மணிக்கு மீளவும் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பெற்றோர்கள் பதிவுகளை உறுதிப்படுத்தவும்.

கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு
0778448763, 021 321 6922
(2202)



### யாழ். நகரில் புதிய காட்சியறை

விளையாட்டு உபகரணங்களின் விற்பனையில் முன்னணி நிறுவனமான ஒலிம்பியா ஸ்போட்ஸ் இன்று (19.08.2010) வியாழக் கிழமை 7.35 முதல் 9.05 வரையான சுப நேரத்தில் தனது புதிய காட்சியறையை ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல. 06, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-உரிமையாளர்
(2200)



### கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு
மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

இலங்கை, இந்தியப் புத்தகங்கள், மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள், சிங்கப்பூர் மலேசியாவில் இருந்து சிறுவர் களுக்கென பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர் இலகுமுறை கற்றல் புத்தகங்கள், பசில்ஸ் (PUZZLES) வகைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் சகலவிதமான உங்களுடைய கற்றல் தேவைகளையும் ஒரே இடத்தில் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளவும்.

விசாலமான இடவசதியுடன் (1200 சதுர அடி) கூடிய நிலப்பரப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அன்னை புத்தகசாலை
சிறப்பு விற்பனை நிலையம்
(C-887) (நல்லூர் பின் வீதி, றியோ கீறிம் கவுஸ் அருகில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.